
டாக்டர் சண்முகஞ் செட்டியார்







கழக
வெளியீடு

கழக வெளியீடு: ௯௫௯

டாக்டர் சண்முகஞ் செட்டியார்

திரு. புலவர் 'அரசு' அவர்கள்
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: August, 1953

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS - 1.

Head Office:

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

உலக மக்கட்கு வழிகாட்டியாகத் திகழ்வோர் அறிஞரேயாவர். அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் முற்போக்கடைந்துள்ளார்கள். அத்தகைய அறிஞருள் பொருளாதாரத்துறையில் டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்கள் வல்லுநராகத்திகழ்ந்தார்கள். இவரின் வாழ்க்கை வரலாற்றுண்மையைத் தமிழுலகில் யாவரும் அறியவேண்டுவது முதன்மையாகும்.

அந்தமுறையில் சண்முகனாரின் வாழ்க்கையை விளக்கத்துடன் திரு. புலவர் அரசு அவர்கள் மாணவர்க்கேற்ற எளிய இனிய நடையில் எழுதியுதவியுள்ளார்கள்.

இத்தகைய வரலாற்றுநூலை அழகிய முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளோம். அறிஞருலகம் ஏற்றுப் போற்றி வாங்கிக்கற்று எம்மை மேலும் ஊக்குமென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

டாக்டர் சண்முகஞ் செட்டியார்

தோற்றுவாய்

முற்காலத்திலே, தமிழ்நாடு இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாலும் முன்னேற்றம் அடைந்திருந்தது. பிற்காலத்து அங்நிலே கெட்டுவிட்டது. இசையும் நாடகமும் தமிழ்ப் புலவர்களாலும் தமிழை ஆதரிப்போ ராலும் ஒதுக்கப்பட்டன. பிறகு, இசையார்வம் தலை தூக்கியபோது பிற நாட்டிசை ஒலிக்கத் தொடங்கியது. தமிழிசை தேவாரம் திருவாய்மொழி திருப்புகழுடன் நின்றது; சிலர் தமிழிலே இசை இல்லையெனக் கூறும் நிலையும் வந்து புகுந்தது. அப்பொழுதுதான் தமிழ் மக்க ளுக்குத் தமிழிசையில் ஊக்கம் உண்டாயிற்று; தமிழி சைச் சங்கம் எழுந்தது. 'ஏழிசையாய் இசைப் பயனாய்' இறைவர் இருக்கின்றாரென இசைத்த தேவாரம் முதலி யவை இசைத்தமிழே என எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

செட்டிநாட்டரசர் சர். அண்ணாமலைச் செட்டியா ரைத் தலைவராகக்கொண்ட தமிழிசைச் சங்கம் 23-12-43-இல் தமிழிசை மாநாடு ஒன்றைச் சென்னை அற மன்றத்தின் எதிரிலே, அரண்மனைக்காரன் தெரு விலே மரியம்மை மண்டபத்திலே கூட்டித் தமிழிசைக்கு ஆக்கம் தேடியது. அவ்வாறு கால்கொண்ட அமு

தனிய தமிழிசைச் சங்கத்தின் துணைத்தலைவராக இருந்து, யாவரும் வியக்கும்படி அழகியதொரு கட்டடத்தையுங் கட்டி முடித்த பெரியார் டாக்டர். ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்கள். தமிழிசைச் சங்கத் திறப்பு விழா 31-10-52-இல் நடைபெற்றது.

தமிழ்நாட்டிலே தோன்றிப் பொருளாதாரத் துறையினும் அரசியல் உலகினும் புகழ்பெற்று உலகப் பேரறிஞராகப் பாராட்டப்பெற்ற நம் சண்முகனர் தமிழிசைக்குமட்டுமன்று, தமிழுக்கும் பெரும்பணி செய்திருக்கிறார்கள். இத்தகைய பெரியார் வரலாறு நமக்கு நலம் பல நல்கி நல்ல துறையிலே செலுத்தும்.

இவ் வரலாறு டாக்டர். ரா. க. சண்முகனரின் மணிவிழா மலரினையும், அப் பெரியார் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகிய வாழ்க்கைத்துணை நூலையும் ஆதரவாகக்கொண்டு எழுதப் பெறுகிறது.

க. பிறப்பும் கல்வியும்

கோவை

கோயமுத்தூர் என்பது கோவன்புத்தூர் என்பதன் திரிபு என அறிஞர்கள் கூறுகின்றனர். கோவன் என்பவன் நிறுவிய புதிய ஊர் என்பது இதன் பொருள். கோவன்புத்தூர் நாளடைவிலே கோவை என மருவியது. இது இப்போது தென்னட்டிலே வணிகத் துறையிலே மேம்பட்ட சிறந்த நகரமாக உள்ளது. நூலாலைகள் ஏறக்குறைய முப்பது உள்ளன; 100-ஆம் எண்ணுள்ள நூல்வரை நூற்கப்படுகின்றன. கைத்தறிகள் மூவாயிரம் இருக்கின்றன. கோயமுத்தூர்ச்

சேலேயும், உருமாலும் பெயர்பெற்றவை. நெசவுத் தொழிலேயன்றி, வேறு பல கைத்தொழிற் சாலேகளும் ஆங்கு உள்ளன.

இந்நகர் கல்வியிலும் மேம்பட்டு விளங்குகிறது. அரசினர் கலேக் கல்லூரியும், பயிர்த்தொழிற் கல்லூரி, காட்டுக் கல்லூரி, பொறியியற் கல்லூரிபோன்ற பிற துறைக் கல்லூரிகளும் பல உயர்நிலேப் பள்ளிகளும், எண்ணிறந்த தொடக்கப் பள்ளிகளும் கல்வியை வளர்க்கின்றன. இங்ஙனம் கல்விச் செல்வத்தாலும் பொருட் செல்வத்தாலும் மேம்பட்ட அந்நகர் அங்ஙனம் ஈட்டிய பொருளாலே பெறும் இன்பத்திலும் மேம்பட்டு விளங்குகிறது. ஆங்காங்கே பல செயற்கைப் பூங்காக்களும் நாடக அரங்குகளும் படக்காட்சிச் சாலேகளும் மக்கள் மனத்தை இன்பத்துறையிலே இழுக்கின்றன. வழிப் போக்கர்கள் தங்கியிருக்கப் பல சத்திரங்களேயும் மடங்களேயும் தன்னகத்தேகொண்ட கோவை அறத்திலும் விளக்கம் பெற்றதாயிற்று.

கோயமுத்தூரின் சிறப்பைக் கோவைகிழார் எழுதிய 'இதுவோ எங்கள் கோவை?' என்னும் நூலிலே விளக்கமாகக் காணலாம்.

இந்நகரின் நடுவே உப்பிலியபாளேயம் என்னும் பிரிவு விளங்குகிறது. நூற்றைம்பதாண்டுகட்கு முன்னர்க் கோவை சிறு நகராகவும் இப்பிரிவு அதன் மேற்கே கோவையிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் பெருவழியில் தென்புறமாக ஒரு சிற்றூராகவும் இருந்தன. இப்பொழுது கோவை பெருநகராய்ப் பரந்து உப்பிலியபாளேயத்தைத் தன் அகட்டிலே அடக்கிக் கொண்டுள்ளது.

முன்னோர்

உப்பிலிய பாளையத்திலேதான் சர். ரா. க. சண்முகனாரின் முன்னோர்கள் வாழ்ந்தனர். இப் பெரியாரின் பாட்டனார் காலத்திலே உப்பிலியபாளையத்திலிருந்து கோவைக் கடைத்தெருவிற்குக் குடியேறினர். இப்போது இக் கடைத்தெருவிலேயே பேரறிஞர்களான திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்களும், சிவக் கவிமணி. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்களும் வாழ்கின்றனர். ராவ் பகதூர். சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்களும் கோவை வாழ்வினரே. இவ்வாறு கல்வி கேள்வி யறிவினும் செல்வத்தினும் மேம்பட்ட அறிஞர்களைத் தன்னகத்தேகொண்ட கோவை எல்லா வகையினும் சிறப்புற்று விளங்குவதில் ஐயமில்லை. இதனைத் தென்னிந்தியாவின் நறுமண மலர்ப்பூங்கா எனக் கூறலாம்.

சண்முகனாரின் பாட்டனார் செல்வத்திலே சிறந்திருந்தாலும் எளிய வாழ்வினர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் பொன்மொழிக்கு இலக்கானவர். இராமசாமிச் செட்டியார் எனில் அவ் வட்டார மக்கள் மதித்துப் பாராட்டிப் பேசுவர். சண்முகனாரின் தந்தையார் கந்தசாமிச் செட்டியாரும் அத் தகையரே. அவர் யாவரையும் அமைதியும் ஒற்றுமையும் பெற்று வாழ வகை செய்வார். அவ்வூரிலுள்ளார் தமக்குள் நேரும் பூசரவைத் தீர்க்க இவரையே நாடுவர்.

பிறப்பு

இங்ஙனம் இயற்கையிலேயே எளிமையும் நட்புப் பண்பும் நிறைந்த, செல்வம் கொழிக்கும் செல்வ வணிகக் குடியாகிய நன்னீர்ப் பொய்கையிலே 17-10-1892-

இல் சண்முகனாராகிய நறுந்தாமரை மலர் மலர்ந்தது. வணிக மரபையும் தமிழ் நாட்டையும் தாம் பிறந்தத னாலே புகழ் பெறச்செய்த இப் பெரியார் நினைத்ததை முடிக்கும் ஆற்றலுடையவர். எனவே, முருகன் பெயர் களுள் ஒன்றாகிய சண்முகனார் என்ற பெயர் இவருக்குப் பொருத்தமாகவே அமைந்தது. 'முருகொத்தியே முன் னியது முடித்தலின்' என்று பெரியார் ஒருவர் கூறிய தொடர் இங்கு நினைவிற்கு வருகிறது.

கல்வி

கோவையம்பதியில் இப்போது ஒற்றுமை உயர் நிலைப் பள்ளி என வழங்குவதான 'இலண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி'யிலே சண்முகனார் கல்வி கற்றார். அப்போது கல்வியில் சிறப்புற்று விளங்கியதுடன் ஒழுக் கத்திலும் மேம்பட்டிருந்தார். கல்வியுடன் ஒழுக்கமும் மாணவர்களுக்குக் கண்கள் என்பதைக் கருத்திற் கொள் வதுதான் இக்காலத்தில் இல்லையே! உயர்நிலை வகுப் புக்கு வந்தவுடன் ஆங்கில இலக்கியமே சண்முகனார் கருத்தைக் கவர்ந்தது. அப்போது நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சி இவர் பிறரிடம் பழகும் உயர்ந்த பண்பை விளக்கும்.

கோவையில் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரி யிலும் படிக்கும் மாணவர்களுக்கு அக்காலத்திலே தனித் தனியே விளையாட்டிடம் இல்லை. இருப்புப்பாதைக் கருகே வாலாங்குளம் என்ற இடமே மாணவர் யாவ ருக்கும் ஆதரவாக இருந்தது. வாலாங்குளம் வால் போலவே நீண்டிருக்கும்; கோடையில் வறண்டுகிடக் கும். அப்போது எல்லா மாணவர்களும் அந்த இடத் திற்கு வந்துவிடுவர். ஆங்கே அவரவர்கட்கு விளையா டத் தனித்தனியே பிரிக்கப்பட்ட இடம் இருக்கும். சில

போது இடப் போட்டி ஏற்படுவதும் உண்டு. தலைமை யாசிரியர்கள் தலையிட்டு அப் போட்டியைத் தீர்ப்பர்.

விளையாட்டிலே பங்கு கொள்ளாத மாணவர் குழாம் அங்குள்ள புல்வெளியிலே தனித்தனிக் குழுவாய் அமைந்து வம்பளப்பது வழக்கம். அப்போது இனிய தென்றல் உலவி அவர்கள் மனத்தை மகிழ்விக்கும். சென்னையின் கடற்கரையிலே உலவிய மாணவர்கள் அந்த இடத்தைக் கோவைநகர்க் கடற்கரை எனக்கூறி அமைவர்.

ஒருநாள், அந்த வாலாங்குளத்தில் ஒரு மரத்தின் நிழலில் மாணவர் குழு ஒன்று இனிமையான உரையாட்டிலே ஈடுபட்டிருந்தது. உயர்திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அப்போது உயர்நிலைப்பள்ளி மாணவராக இருந்தார். அவர் அம் மாணவர் குழு இருக்கும் பக்கமாக நீளச்சென்று திரும்பினர். அவர் தனிமையிலே சென்று திரும்பி வருவதை அங்கிருந்த மாணவர் குழுவில் ஓர் இளைஞர் கண்டார். செட்டியார் படித்த பள்ளி வேறு, இவர்கள் பள்ளி வேறு. ஆகையால், செட்டியார் அவர்களிருக்குமிடம் வராமலே சென்று கொண்டிருக்கிருர் என்பதை அந்த இளைஞர் அறிந்து கொண்டார்.

அவர், 'இதோ பாருங்கள், இந்த இளைஞர் சிறிது நேரத்திற்குமுன்னே இவ்வழியே சென்ருர் ; உடனே, ஏனோ திரும்பிவிட்டார்' என்று தம் நண்பர்களிடம் நவின்ருர்.

கேட்டுக்கொண்டே வந்த செட்டியார், 'என் நண்பர்களை எதிர்பார்த்து வந்தேன். ஒருவரும் வந்திலர் ; திரும்பிப் போகின்றேன்.' என்ருர்.

அந்த மாணவர், 'ஆங்கிலேயர்களே அறிமுகமாக்கு வோரின்றிப் பிறரிடம் பழகுவதில்லை. நம் நாட்டிலோ, தாமே அறிமுகம் செய்துகொள்ளும் பழக்கம் இருக் கிறது. நீர் விரும்பினால் எங்களுடன் நட்புச் செய்து கொள்ளலாம்' என்றார்.

செட்டியாரும் மகிழ்ந்து அவர்களுடன் நட்புக் கொண்டார். அவ்வாறு செட்டியாரை வலிதின் அழைத்து நட்புப்பூண்ட அந்த இளைஞர் சண்முகனாரே. 'யாவரும் கேளிர்' என்று கொள்வது தமிழ் மரபு.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடியுமுன்னரே தம் அருமைத் தந்தையாரை நம் சண்முகனார் பிரிந்தார். எனினும், உழுவலன்புடைய பாட்டனாரால் ஆதரவு பெற்றுச் சிறிதும் கவலையின்றிக் கற்கத் தொடங்கினார்.

பள்ளியிறுதிப் படிப்பு முடிந்ததும் 1910-இல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலே சேர்ந்தார். இங்கும் இவர் கல்வியும் ஒழுக்கமும் நேர்மையாகவே அமைந்தன. கல்லூரித் தலைவர் இவரிடம் பேரன்பு கொண்டார். இங்கும் ஆங்கிலக் கலைகளே இவர் மனத்தைக் கவர்ந்தன. மேலும் சாக்ஸன், கோத்திக் மொழிகளையும் கற்றார். கோத்திக் மொழியிலே மொழிபெயர்க்கப்பட்டிருந்த விவிலிய மறையைப் பொழுதெலாங் கையிலேந்திக் கற் றார். இவருடைய நூல் நிலையத்திலே ஆங்கில இலக்கி யங்கள் அழகுசெய்தன. தமிழ் நூல்களின் பழக்கம் அப்போது இவருக்குக் கிடைத்திலது.

இங்குக் கற்கும்போது, சென்னையில் உள்ள கிறித் தவ இளைஞர் கழகத்தில் (Y. M. C. A.) நடந்த பேச்சுப் போட்டியிலே சண்முகனாரும் கலந்துகொண்டார். பல

கல்லூரி மாணவர்களிடையே சிறிதும் தடுமாற்றம் இன்றித் தாம் எடுத்துக்கொண்ட பொருளை யாவர் உளத்திலும் ஊன்றுமாறு எடுத்துக்கூறியதனால், இவருக்கே பரிசு கிடைத்தது ; ஊக்கமும் வளர்ந்தது.

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது'

என்னுந் தமிழ்மறை இங்கே பொருத்தமாகின்றது.

இப்பரிசு பெற்றபிறகு, ஒரு நாள் கோவையிலே கிறித்தவ இளைஞர் கிளைக்கழகத்திலே, ஒரு முதிய ஆசிரியர் தலைமையில், ஆங்கில மொழியில் ஐரோப்பிய இடைக் கால வரலாற்றைப்பற்றிப் பேசினார். தலைமை யேற்ற பெரிய ஆசிரியர் பேசும்போதும் அமைதியின்றிப் பேசிக் கொண்டிருந்த அந்தப் பேரவை இளைஞரான சண்முகனுடைய—வரலாற்றுப் பேச்சிலே—ஒரு மணி நேரம் வரை அலையடங்கிய கடலென அமைதியாயிருந்தது.

அச் சொற்பொழிவின்போது, மேடைக் கருகிலே ஒரு பெரியார் நாற்காலியிலே பெருமிதத்துடன் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். அவர் முகத்திலே மகிழ்வு பொங்கியது. அவையோர் ஆரவாரிக்கும்போதெல்லாம் இவரும் கைதட்டி ஆரவாரித்தார். அப் பெரியாருக்கோ சிறிதும் ஆங்கிலமே தெரியாது. அப்பெரியார் சண்முகனாரின் பாட்டனார் இராமசாமிச் செட்டியார். தந்தையின் நிலையிலே இருந்து பேரனைப் படிப்பித்த அவர், தம் பேரன் ஒரு பேரவையிலே யாவரும் போற்றி வியக்குமாறு சொல்மழை பொழியும் சிறப்பைக் காதும் கண்ணும் மனமுங் குளிர நுகரவே அங்கு வந்திருந்தார். அவர் தம் பேரன்மேற் கொண்ட பேரன்பினைக்கண்ட அறிஞர் பலரும் பாராட்டினர்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்'

என்பதற்கிணங்கத் தந்தையின் பணியைத் தாம் கைக்கொண்டு செய்துவந்த அவரைப் பாராட்ட நம் உள்ளமும் முந்துகிறதன்றோ !

சண்முகனர் இவ்வாறு தம் சொற்பொழிவு மாரியிலுலே தம் கோவை நகர மக்களை அன்று குளிரச்செய்து,

'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென் னுஞ் சொல்'

என்னும் வள்ளுவர் மறைக்குச் சான்ருனர்.

கல்லூரியிலே படிக்கும்போது இவருடைய செயல் திறமையை விளக்க ஒரு சான்று :

அக்காலத்தில் திருப்பூரில் மாவட்ட அரசியல் மாநாடு நடந்தது. அங்குப் பணிபுரிந்த சாரணக் குழுவின் தலைவராக நம் சண்முகனர் சென்ருர். எல்லாம் ஒழுங்காக நடைபெற்றும், செருக்கு மிக்க ஒரு பிரதிநிதி ஒரு சாரணர்மீது குறைகூறினர். அக் குறை உண்மையான தன்றெனெ நம் சண்முகனர் உணர்ந்து, தம் குழுவுடன் வெளியே வந்துவிட்டார். மாநாட்டுத் தலைவர் இதனை அறிந்து மனந்துடித்தார். உடனே அப் பிரதிநிதியை அழைத்துச் சாரணப் படையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் செய்தார். அப்போது சண்முகனர், 'இனிமேலாவது தம் நடத்தையை இவர் ஒழுங்கு செய்து கொள்ளட்டும். இவரினும் சாரணக் குழுவிலே படிப்பிலும் ஒழுக்கத்திலும் மதிப்பிலும் சிறந்தவர்கள் இருக்கிருர்கள் என்பதை இவர் அறிய வேண்டும்' என்று அப் பிரதிநிதியின் தற்பெருமையை ஒடுக்கினர்.

இளைஞராக இருக்கும்போதே ஒழுங்கை நிலைநாட்ட அச்சம் இன்றி நடவடிக்கை எடுக்குந் திறன் இவரிடம் இருந்ததென்பதற்கு இது தக்க சான்றாகும்.

மாணவராக இருக்கும்போதே 'ஹோம் ரூல்' இயக்கத்தை நடத்திய அன்னிபெஸண்டு அம்மையாரிடம் பழகினார். சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருட்டின கோகலே போன்ற பேரறிஞர் பேச்சிலே ஈடுபட்டுக் கேட்டுத் தம்மையும் அந்நிலையிலே கொண்டுவர முயன்றார். ஒருமுறை சென்னை சுங்குராம செட்டித் தெருவில் திரு. ஜி. எ. நடேசனாரிருப்பிடத்திலே முதன்முறையாகக் காந்தியடிகளைக் கண்டு மகிழ்ந்தார். காந்தியடிகள் அப்போது புகழ்பெற்ற 'மகாத்மா' ஆகவில்லை. வெள்ளைத் தலைப்பாகையும் வெள்ளைச் சட்டையும் ஆடையுமாகக் காட்சியளித்த அடிகளிடம் அப்போதே நம் சண்முகனார்க்குப் பழக்கம் உண்டாகிவிட்டது.

எனவே, சண்முகனார் மாணவராக இருக்கும்போது படிப்புத் திறமையிலும், ஒழுங்கிலும், பேச்சுத் திறமையிலும், பெரியோர் நட்பிலும் மேம்பட்டு விளங்கினார் என அறிகிறோம். 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கு இவர் தக்க சான்றாவார்.

1915-இல் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியிலே சேர்ந்தார். அப்போது திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்களும் உடன் பயின்றனர்.

உ. அரசியற்பணி

கோவை நகராண்மைக் கழகம்

சென்னையில் மாணவராகச் சட்டங் கற்கும்போதே கோவை நகராண்மைக் கழக உறுப்பினராகவும் பின்னர்த் துணைத்தலைவராகவும் இருந்து பணியாற்றினார். சட்டத் தேர்விலே தேர்வுற்ற பின்னர்ச் சிறிதுகாலம் கோவையில் வழக்குரைஞராக இருந்தார். எனினும், இவர் உள்ளம் பொதுநலச் சேவையிலேயே சென்றது. இன்ப அலை புரளும் பெருங் கடலிலே ஓடும் கப்பல் சிறு குளத்திலே என்ன செய்யும்?

சென்னைச் சட்டசபை

1920-இல் 'மாண்டேகு-செம்ஸ்போர்டு' சீர்திருத்தத்தின் வண்ணம் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்றன. அந்நாளில், 'இந்து' நாளிதழ் ஆசிரியராக இருந்த கத்தூரிரங்க ஐயங்கார் அறிவுறுத்தலின்மேற் சண்முகனூர் நீலகிரி மாவட்டத்தில் ஒரு பிரிவுக்கு நின்றார். இவருக்குப் போட்டியாக நின்ற பெரியார் அந்த மாவட்டத்திலே முடிசூடா மன்னராகச் செல்வாக்குடனிருந்தவர். எனினும், இளைஞரேயான சண்முகனூர் சில வாக்குகள் மிகுதியாகப் பெற்று வெற்றியுற்றார். இவ் வெற்றியே இவரை வழக்குரைஞர் வாழ்விலிருந்து அரசியல் வாழ்விலே திருப்பியது.

> 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்'

என்னும் பொய்யா மொழியின் இலக்கியம் இவரே என்பதை அப்போதே யாவரும் அறிந்தனர்.

அந்நாளிற் சென்னைச் சட்டசபையிலே அரசாங்கக் கட்சியினராக நீதிக் கட்சியினர் விளங்கினர்; சர். ஏ. பி.

பாத்ரோ என்னும் பெரியார் அரசாங்க ஆக்க அமைச்சராக இருந்தார். நம் சண்முகனுர் அவருக்குக் 'கௌன்சில்' செயலாளராக அமர்ந்தார். இளமைப் பருவமும் அறிவுத் திறமையுங் கொண்ட இவர்க்கு அப்பதவி சிறந்த அரசியல் தலைவராக வழிகாட்டியது; அரசியல் நன்மைகளை ஆராயும் வாய்ப்பை வழங்கியது. சென்னைச் சட்டசபையில் இவர்தம் திறமையால் யாவராலும் புகழ்ப்பெற்ருர்.

இந்தியச் சட்டசபை

நாடெங்கும் சண்முகனுரின் அறிவுத்திறமை வெளிப்பட்டது. 1923-ஆம் ஆண்டு சேலம், கோவை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களின் சார்பாக நின்று இந்தியச் சட்டசபையின் உறுப்பினரானுர்.

அங்கே, சண்முகனுர் சுயராச்சியக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அப்போது சுயராச்சியக் கட்சி எதிர்க்கட்சியாக விளங்கியது. பண்டித மோதிலால் நேருவே அந்த எதிர்க்கட்சியின் தலைவர். நேருவின் உள்ளம் சண்முகனுரின் திறமையை வரவேற்றது. எனவே, அக் கட்சியிலே நலம் பல புரியும் வாய்ப்பை நல்கினுர். தென்னுட்டில் நடைபெற்ற சுயராச்சியக் கட்சித் தேர்தல்கள் எல்லாவற்றையும் சண்முகனுரின் பொறுப்பிலே விட்டார். தமக்குக் கிடைத்த பணியைச் சண்முகனுர் நன்கு நடத்திப் பாராட்டுப் பெற்ருர். அக்காலை, திருச்சியிலே நடைபெற்ற சண்முகனுரின் சொற்பொழிவு யாவராலும் மதிக்கப் பெற்றது. இவ்வாறு, சுயராச்சியக் கட்சிக்குப் பெருஞ் சிறப்பைத் தேடித் தந்தவர்களில் சண்முகனுர் தலைசிறந்தவரானுர்.

அரசியற்பணி புரிவோருக்குப் பொருளாதாரம் மட்டும் வேம்பாக இருக்கும். விளக்கெண்ணெய் கண்ட

சிறுகுழந்தைகளின் மனம்போல அவர்கள் மனம் நடுங்கும். எனவே, அவர்கள் அத்துறையிலே ஈடுபடமாட்டார்கள். நலம் தரும் அப்பணியை இவர்கள் விழுங்கும் ஆற்றலிலர். சண்முகனுர்க்கோ அப்பணி இனிய கற்கண்டு போன்றது. இந்தியச் சட்டசபையிலே பொருளாதாரச் சொற்பொழிவு சண்முகனுர் செய்யப் புகின் வெளியில் உலவும் உறுப்பினர்களும் அரசாங்கக் கட்சியினரும் விரைந்து வந்து அமர்ந்துவிடுவர். அவையிலே அமைதி நிலவும்.

அப்போது பொருளாதார அமைச்சர் சர் ஜார்ஜு ஷுஸ்டர் என்னும் வெள்ளையராவார். அவர் பிற சமயங்களில், தம் இருக்கையிலே சாய்ந்து கனவு கண்டு மகிழ்ந்திருப்பார். சண்முகனுரின் சொற்பொழிவு எனின், கனவு நீங்கி நிமிர்ந்து உட்கார்ந்து கையிலே பேனு ஏந்திக் குறிப்பெடுக்க எச்சரிக்கையாக இருப்பார்; தம் துணைவர்களைத் தூண்டிய வண்ணம் கலங்கி நிற்பார். அவர் பேச்சு முடியும் வரையில் தம் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பார். சுயராச்சியக் கட்சி உறுப்பினரோ கைதட்டி ஆரவாரித்து, மகிழ்ச்சியாலே பருத்துச் செம்மாந்திருப்பர். இவ்வாறு, சண்முகனுர் இந்தியாவின் பொருளாதார நிலையின் செவிலியாக இருந்து பணி புரிந்தார்.

இத்தகைய சிறப்புடன் பணிபுரிந்த சண்முகனுர் தம் நாற்பதாம் அகவையிலே (1932) இந்தியச் சட்டசபையின் தலைவரானுர். வேறெவரும் இவ்வயதிலே அப்போது தலைமைப் பதவி பெற்றதில்லை. இவருக்கு முன் அதன் தலைவராக இருந்து புகழ்பெற்ற அரியேறு விட்டல்பாய் படேல் ஆவர். அவரைப் போலவே சண்முகனுரும் தலைமைப் பதவிக்கு இழுக்கின்றிச் சிறப்

புறநடத்தினுர். எதிர்க் கட்சியினராக முன்னர் இருந்தாலும் தலைமைக்கேற்ப அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் நடுவே நின்று, ஒருபாற் கோடாமலே தம் தீர்ப்பை அளித்தார்; காய்தல் உவத்தல் அகற்றியிருந்தார். அரசாங்கத்தின் சார்பாக இல்லாமல், நாட்டு மக்களுக்கு நலம் வழங்க வேண்டியபோது அஞ்சாமல் நடந்து கொண்டார்.

சண்முகனுர் தலைவரான தொடக்கத்திலே ஒருநாள் பொருளமைச்சரான சர். ஜார்ஜு ஷுஸ்டர் புன்முறுவலுடன் எழுந்து நின்று, 'இப்போது என்பணி எளிதாகி விட்டது. ஏனெனில், எப்போதும் எனக்குத் தலைவலி தரக்கூடிய சர். சண்முகனுர் அவர்கள் இன்று சபைத் தலைவராக வந்துவிட்டார். வழக்கம்போல என்னை அவர் இன்றும் புளியம் வளாரால் அடிப்பித்திருப்பின் இத்துணை மகிழ்வுடன் எழுந்திடல் இயலாது.' என்று தாம் அவருடைய தாக்குதலினின்றும் விடுபட்ட மகிழ்வை எடுத்துக்காட்டினுர். சண்முகனுர்க்கு இந்தியச் சட்டசபைத் தலைவராக இருக்குங்காலை, 'நைட்' பட்டம் கிடைத்தது. அப் பட்டம் பின்னர் இவர் உரிமை இந்தியாவில் அமைச்சரானபோது இவரால் துறக்கப்பட்டது. 1934-ஆம் ஆண்டில் நடந்த சட்டசபைத் தேர்விலே காங்கிரசின் செல்வாக்கு எங்கும் பரவியிருந்தபடியால், காங்கிரசின் எதிர்ப்பாக நின்ற சண்முகனுர் தோல்வியடைந்தார். அத் தோல்வியே முதலும் இறுதியுமான தோல்வியாகும்.

பிற அரசியற் பணிகள்

1920 முதல் நம் சண்முகனுர் இந்தியாவின் பிரதிநிதியாகப் பல சர்வதேச மாநாடுகளுக்குச் சென்றுள்

ளார். ஜினிவாவிலே நடைபெற்ற உலகத் தொழிலாளர் மாநாட்டுக்கு ஐம்முறை சென்றுள்ளார். அம் மாநாடு களில் இவருடைய நுண்மாண் நுழைபுலம் பொருந்திய பேச்சாற்றல் நன்கு வெளியாயிற்று. முதல் உலகப் போர் முடிவுக்குப் பின்னர் பிரிட்டிஷ் குடியேற்ற நாடு களின் மாநாடு ஒன்று ஆஸ்திரேலியாவில் நடந்தது. அதற்கும் நம் சண்முகனார் இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்று வந்தார்.

கானடா நாட்டில் ஆட்டோவா என்ற நகரிலே (ஒட்டாவா என்றும் கூறுவர்) நடந்த வணிக ஒப்பந்த மாநாட்டுக்கு 1932-இல் நம் சண்முகனார் சென்று ஒப்பந் தம் செய்து வந்தார். அந்த ஒப்பந்தத்தை நம் நாடெங் கும் ஒட்டாத ஒப்பந்தம் என—நாட்டுக்கு நலன்தராத தென—இகழ்ந்தது. இந்தியச் சட்டசபையிலும் உறுப் பினர் பலரும் வினாக்கள் பல விடுத்துத் தாக்கினர்; 'வேற்று நாட்டுக் கையாளாக விளங்கிவிட்டார் இவர்' என்றும் நாவில் நரம்பின்றித் தூற்றினர்.

அப்போது, சட்டசபையில் தம்மைத் தாக்கியவர் களுக்குப் புன்முறுவலுடன் சண்முகனார் விடையளித்த திறமை பாராட்டத் தக்கது. சற்றும் பொருளாதார நிலையறியாமல் நாடெங்கும் பரவியெழுந்து, சட்டசபை யிலே கொழுந்துவிட்டெறியும் வசைத் தீயைத் தம் அறிவுத்திறமை பொருந்திய சொல் மழையாலே தணித் தார். போலிப் பொருளாதார அறிஞர்களின் அறியா மையையும் புரட்டு வாதங்களையும் பொருளற்ற பேச்சினை யும் பிரித்துப் பிரித்துச் சுட்டிக் காட்டினார். சொற்க ளும், சொற்றொடர்களும், வினாவிடைகளும், நகைமொழி களும் சண்முகனாருடைய சொல் மழையிலே சடசட வென மின்னி இடித்து எதிர்த்தவர்களின் உள்ளத்தை

நடுக்குவித்தன. அவரை எதிர்த்துப் பேசிய உறுப்பினர், 'துஞ்சுபுலி இடறிய சிதடன் போல'ச் செயலற்றனர். எனவே, ஆட்டோவா ஒப்பந்தம் ஒட்டாத ஒப்பந்தம் அன்றெனவும் நலம்பல நல்கும் தகலினது என்றும் நாடெங்கும் அறிந்தது.

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப' மொழிந்த அச் சொற்பொழிவு சண்முகனுர்க்குப் பெரும் புகழைப் பரப்பியது.

நம் நாடு ஆங்கில ஆட்சியினின்றும் விடுதலை பெற்ற பின்னர் நடந்த சர்வதேச வணிக மாநாட்டுக்கு இந்திய அரசாங்க வணிகப் பிரதிநிதியாக நம் சண்முகனுர் சென்றிருந்தார். அந்த மாநாட்டிலே இவரே நம் நாட்டின் சிறப்பை நிலை நாட்டினுர். 'இந்தியர்களாகிய நாங்கள் போர்க்களங்களிலே உங்கட்குச் சமமாகப் போர்செய்து வீழ உரிமையிருக்கும்போது, உலகிலே எங்கள் நாடு உங்கள் நாட்டுடன் சமமாக வாழ என்ன தடையிருக்கக் கூடும்?' என்று வினவினுர்.

கொச்சி திவான்—சீர்திருத்தம்

அரசியலிலிருந்து விலகாமல் மேலும் பணிசெய்யும் ஊழ் இருந்ததனுலே 1935 முதல் கொச்சி மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கித் திவானுக நம் சண்முகனுர் அமர்ந்தார். தொடக்கத்திலே, கொச்சி மக்கள் இவரிடம் நல்லெண்ணம் கொள்ளவில்லை. எனினும், கரும்பை அதன் நுனியிலிருந்து தின்பதுபோல, இவருடைய பழக்கம் பழகப்பழக இனிப்பதைக் கண்டனர். பொதுவாகவே சமஸ்தான மக்கள்—காங்கிரசு பரப்பிய உரிமை மணத்தை நுகர்ந்து—தம் அரசரையும் அரசரின் பிரதிநிதியான திவானையும் அக்காலத்தே வெறுத்

தனர். சமஸ்தான மன்னர்களும் குடிகளின் நலனைக் கருதாமல் தம் ஆடம்பர வாழ்க்கையைக் குறைவில்லா மற் பார்த்துக் கொண்டு வந்தனர். இங்நிலையிலே சண்முக னரிடம் அன்பு காட்டினர் எனின், குடிகளின் உணர்ச் சியை இவர் எவ்வளவு கவர்ந்திருப்பார் என்பது நினைவு கூரத் தக்கதொன்றாகும். அவ்வாறு அவர் செய்த தென்ன?

சண்முகனார் திவானாகுமுன் சமஸ்தானங்களில் மன்னராட்சியே நடைபெற்றது. குடிகளுக்கு உரிமை யில்லை. அதனாலேதான் காங்கிரசின் முயற்சியைக் கண்ட மக்கள் தாங்களும் உரிமை பெற விழைந்தனர். அவர்கள் விழைவை நம் சண்முகனார் உணர்ந்து முதன் முதலாகப் பொறுப்பாட்சியை மன்னர் வாயிலாக நல்கி னார். இது புரட்சித் தன்மையான சீர்திருத்தம் என நாடெங்கும் பாராட்டியது. குடிகளுக்கு உரிமை வழங்கிய தால், இந்திய சமஸ்தானங்களின் முன்னணியிலே கொச்சி நின்றது. கொச்சி மன்னர் சண்முகனார்க்கு மாவீரர் என்னும் பட்டம் நல்கினார். சண்முகனார் வேறு பல சீர்திருத்தங்களும் செய்து குடிகளின் உள்ளத் திலே நீங்காத இடம்பெற்றார். இங்ஙனம் 1941 வரை பணியாற்றினார். கல்வி, கைத்தொழில், வணிகம் முதலியவற்றினும் குடிகளை முன்னேற்றம் பெறச் செய்தார்.

உரிமை நாட்டிற் பொருளமைச்சர்

1947-ஆம் ஆண்டிலே இந்தியா உரிமை பெற்றுப் பாரத இராச்சியமென்றாயிற்று. பண்டித ஜவஹர்லால் நேரு உரிமை நாட்டின் முதலமைச்சரானார். அரசியல் அறிஞர்களான வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு

வெளியேறினர். பாரத இராச்சியத்திலே பல துறைகளினும் பணியாற்ற அமைச்சர்களை நிறுவும் பொறுப்பு நேருவுக்கு நேர்ந்தது. பொருளாதாரத்துறை பிற துறைகளினும் சிக்கலானது. அத்துறையிலே அமர்ந்து அமைச்சுப் பணி புரியப் பொருளாதாரப் பேரறிஞராக உலகம் புகழும் சண்முகனாரே தக்கவரென நேரு எண்ணியதில் வியப்பொன்றும் இல்லை. சண்முகனார் காங்கிரசு உறுப்பினரல்லர். எனினும், அரசாங்கத்திலே கட்சி மனப்பான்மை வேண்டா என முடிவுசெய்து, சண்முகனாரிடம் அப்பொறுப்பை ஒப்பித்தார். சுயராச்சியக் கட்சியிலே முன்னாளில் அமர்ந்து, அளவில்லாத புகழ் பெற்ற ஆங்கிலப் பொருளாதார அமைச்சர்களை ஆட்டிய சண்முகனார் தம் பணியிலே நன்கு ஈடுபட்டார்.

இந்தியக் கைத்தொழில்களை யெல்லாம் அரசாங்கமயம் ஆக்குவதென்னும் செய்தியொன்று அந் நாளிலே மக்களை அச்சுறுத்தி வந்தது. அது பொய்யென வல்லபாய் படேல் ஆங்காங்கே மறுத்து வந்தார். எனினும், சண்முகனாரின் நிதியமைச்சுப் பதவிக்குப் பின்னர் அவர் கூறிய உறுதியின் பிறகே அச்சம் விடுத்தனர். பாரத அரசாங்கத்திலே இவர் நிறுவிய வரவு செலவுத் திட்டம் வணிக உலகிலே புத்துயிர் ஊட்டியதெனலாம். நாணய மாற்று முதலிய சிக்கலான பொருள் துறைகளைப் பற்றிப் பேசவும் இவர் இங்கிலாந்து சென்று வந்தார். பிரிட்டனிடமிருந்த ஸ்டர்லிங் கையிருப்பை யெல்லாம் உரிமைப் பாரதத்திற்கு வாங்கித் தந்தார்.

இவ்வாறு, உண்மையும் உறுதியும் தலைமையுமான பணியாற்றி வரும்போது, அரசியற் சூழ்நிலை

ஒன்றினாலே சட்டசபையில் தம் அமைச்சுப் பதவியை விட்டு விலகித் தம் ஊர் வந்து சேர்ந்தார். சில அரசியல் தலைவர்களைப்போலத் தம் பதவியை உடும்புப் பிடியாய்ப் பற்றி நிற்கும் உளப்பான்மை இவரிடம் இல்லாமை கண்டு நாடு வியந்தது. தம் பதவியை விட்டு விலகக் காரணர்களாக இருந்தவர்களின்மேற் பகைமை அறிக்கையோ வெறுப்புரையோ விளக்கமோ இவர் சிறிதும் உளங் கொள்ளவில்லை.

அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், சென்னை மேல்சபை யுறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

சர். சண்முகனாரின் அரசியற்பணி தூயது; உறுதியானது; நாட்டின் நலத்திலே உறுதிகொண்டது; நடுநிலை திறம்பாதது; அச்சமில்லாதது. தமிழ்நாட்டிலே தோன்றி உலகெங்கும் புகழ் பெற்றதனாற் சண்முகனார் தமிழ்நாட்டின் செஞ்ஞாயிறாகின்றார்.

இக்காலத்தில் உலகியற் சட்டம் வேறு, அறம் வேறு என்றநிலை எப்படியோ உண்டாகிவிட்டது. தாம் செய்வது தவறென உணர்திறம் மனத்திற்கிருப்பினும் சட்டத்தின்வழி செல்லவேண்டி மனச்சான்றை விட நேர்ந்துள்ளது. இந்நிலையிலும் சர். சண்முகனார் அவருடைய சட்ட அறிவை, அறத்தை நிலைநிறுத்தவே பயன்படுத்தினார். மற்றும், தம்முடைய பொருளாதாரக் கருத்தை மக்களிடையே எளிய முறையிலே எல்லோருக்கும் விளங்கும்படி எடுத்துக்கூறும் ஆற்றல் பெற்றிருந்தார். இத்திறன் எல்லா அறிஞர்க்கும் வாய்ப்பது அரிது. இத் திறமையினாலும் இவருடைய அரசியற் பணி நன்கு விளக்கமுற்றது.

---

௬. தமிழ்ப்பணி

ஆங்கில ஆட்சியின் பயனாலோ, தமிழ்நாட்டிலேயிருந்த ஒற்றுமைக் குறைவினாலோ, தமிழ் மக்களுக்குப் பிறநாட்டின் பழக்க வழக்கங்களின்மீதும் பிறமொழியின்மீதும் பற்றும் தாய்மொழியாகிய தமிழ்மொழிமீது புறக்கணிப்பும் உண்டாகி வளர்ந்துவந்தன. இதன் காரணத்தாலே சிறிது காலத்துக்கு முன்வரையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தாய்மொழியைப் படித்தே ஆகவேண்டும் என்ற வற்புறுத்தல் இல்லாமற் போயிற்று.

சண்முகனார் 'மெட்ரிகுலேஷன்' வரையிலேதான் தமிழ் படிக்கும் வாய்ப்புப் பெற்றனர். கல்லூரியிலே 'இண்டர்மீடியட்'டில் சில வினாக்களுக்கு விடை எழுதும் வற்புறுத்தலுக்காகக் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் படித்தனர். பி. ஏ. வந்த தமிழைத் திரும்பிப் பார்க்கும் வாய்ப்பும் பெற்றிலர். சட்டப் படிப்பு முடிந்து கல்லூரியைவிட்டு வெளிவந்த பிறகும் ஆங்கில நூல்களால் தம் நூல்நிலயத்தை நிரப்பினரேயன்றித் தமிழ் நூல்களைக் கண்ணாலுங் கண்டிலர்.

பின்னர், தமிழ்நாடு செய்த நல்வினையாலே எப்படியோ தமிழில் ஆர்வம் உண்டாகித் தமிழ் கற்க முற்பட்டனர். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் தேவாரம் திருவாசகம் முதலிய சமய நூல்களையும் அவ்வத் துறைகளிலே புலமைபெற்ற அறிஞர்களின் துணைகொண்டு சிறிது சிறிதாக ஆராய்ந்தனர்.

இயற்றமிழ்ப் பணி

சண்முகனார் தமிழ் கற்கும்போது சந்திகளாலும் சொற் சேர்க்கையாலுண்டான மாற்றங்களாலும் படிப்ப

தற்கு இடையூறு உண்டாகின்றதென்று உணர்ந்தனர். தமிழ்நூல்களைச் சந்தி பிரித்துப் பதிப்பது நலம் என எண்ணினர். அந் நோக்கத்துடன் சிலப்பதிகாரத்துக்குத் தாம் கற்ற குறிப்புக்களைத் திரட்டி ஓர் உரை எழுதிப் பதிப்பித்தனர். இம் முறையைக் கண்டு பண்டித மணி - கதிரேசச் செட்டியார் பாராட்டியதுடன் தாமும் திருவாசகத்தை இம்முறையிலே ஓர் உரையுடன் பதிப்பித்தார். சண்முகனார் தமிழறிஞர் கூட்டங்களிலே பேசும்போதெல்லாம் சந்தி பிரித்தெழுதியே நூல்களைப் பதிப்பிக்கவேண்டும் என உரைப்பது வழக்கம்.

மேலும் சண்முகனார் பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டு என்னும் நூலைச் செய்யுளின் பொருள் விலகாமல் இனிய எளிய உரை நடையிலே எழுதி வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழ்ப்பற்றுடைய எல்லோருமே தமிழ்ப்பணிசெய்ய இயலாது. போருக்குரிய வாளைப்பிடித்த கோழையாலே போர்செய்ய முடியுமா? சண்முகனார்க் குண்டாகிய தமிழ்ப்பற்று நாட்டுக் குதவியாக விளங்கியதற்குக் காரணம் அவருடைய செல்வாக்கும் புகழுமேயாகும். தாம் நினைத்ததை முடிக்கும் ஆற்றல்மிகுந்த அவர் எல்லோரும் பாராட்டக்கூடிய முறையிலே தமிழ்ப்பணி செய்தார்.

சண்முகனார் திரிசிரபுரத்தில் எழுத்தாளர் கூட்டத்தில் ஒருமுறை பேசியபோது கூறியதை நோக்குவோம்:

"தமிழ் இலக்கியத்திற் பல பழைய நூல்கள் இருக்கின்றன. தமிழ்ப் பண்பு மிகப் பழமையானது மல்லாமற் பல நாடுகளிலும் பரவியுமிருந்திருக்கிறது. பாரசீகம், இராக், மெசபடோமியா என்ற இடங்களில்

வாழ்ந்துவந்த 'கால்டியன்ஸ்' என்பவர்கள் தங்கள் தலை நகரை 'ஊர்' என்றழைக்கிறார்கள். ஊர் என்பது தமிழருக்கே உரியசொல்."

"ஒரு குஜராத்தி நண்பர் பம்பாயில், 'உங்கள் தமிழில் எங்கள் மொழியில் இருப்பதுபோல அத்துணைப் பழைய இலக்கியங்கள் இருக்கின்றனவா?' என்று வினவினார். நான், 'உங்கள் மொழியில் எத்தனை ஆண்டுகளுக்கு முந்திய இலக்கியம் இருக்கிறது?' என வினவினேன். அவர், 'ஐந்நூறு ஆண்டுகள்' என்றார். நான், 'கி. மு. ஐந்நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்ட இலக்கியங்கள் இருக்கின்றன!' என்றேன். நமக்கே தெரியாதிருக்கும்போது இவருக்கு எப்படித் தெரிவிப்பது? தொல்காப்பியம், புறநானூறு முதலிய நூல்கள் எல்லாம் பழைய தமிழ்ப் பண்புகளைக் கூறுவன. பழைய இலக்கியங்களிலிருந்து வரலாற்றுத் தொடர்பானவை என்ன இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்தல் நன்று. ஒரு நூலைப் படிக்கும்போது இடையிடையே வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சிகளோ, நாட்களோ, பண்புகளோ வந்தால் அவற்றைத் தனியே எடுத்து வைத்துவிட்டால் வரலாற் றாராய்ச்சியாளர்க்கு நற்பயன் தரும்."

சண்முகனார் தாம் உரை யெழுதிப் பதிப்பித்த சிலப்பதிகார முகவுரையிலே கூறுகிறார்:

"நூலைப் படிக்கப் படிக்க என் உள்ளத்திலே மகிழ்ச்சியும் துக்கமும் கலந்து எழுந்தன. உலகிற் பல மொழிகளில் தோன்றிய சிறந்த பெருங்காப்பியங்களிலே சிலப்பதிகாரமும் ஒன்றல்லவா என்று அறிந்து மகிழ்ந்தேன். நம் தமிழ் முன்னோர் நமக்குத் தந்த இப் பெருஞ் செல்வத்தை இத்துணைக் காலம் அறியாமலும் அநுப

விக்காமலும் இருந்துவிட்டோமே என்று துக்கப்பட்டேன்.''

''நான் வாழும் நாடு தமிழ்நாடு என்று உணர்ந்தேன். இது இளங்கோவடிகளும் கம்பனும் பிறந்த நாடு; ஷேக்ஸ்பியரும் மில்டனும் பிறந்த நாடல்ல என அறிந்தேன்.''

எத்துணை உணர்ச்சி! தமிழ்ப்பணி புரியும் தகுதி வாய்ந்த எல்லோருக்கும் இந்த உணர்ச்சி உண்டாகும் நாள் எந்நாளோ?

சிலப்பதிகார முகவுரையில் மற்றோரிடத்திலே, காவிரிப்பூம் பட்டினத்தைப்பற்றிக் கூறுகிறார்:

''ஏறக்குறைய 2000-ஆண்டுகட்கு முன்பே இந்தப் பட்டினம் உலகெங்கும் புகழ்பெற்றிருந்தது. இந்தியாவைப்பற்றி, மேல்நாட்டார் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்குமுன் எழுதின நூல்களினும் குறிப்புக்களினும் புகார்நகரம் சிறந்த துறைமுகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.''

''இவ்வளவு சிறந்த நகரம் இருந்த இடமுங்கூடத் தெரியாமல் அழிந்துபோய்விட்டது!''

பழமையை எடுத்துக் காட்டுவதுடன் அந் நகரம் அழிந்ததற்கு வருத்தமும் காட்டுகிறார்.

சண்முகனார்க்குத் திருக்குறளை எல்லோரும் ஓதி உணரும்படி அத்துணை எளிதான உரையொன்றை எழுதி வெளியிடவேண்டும் என்ற கவலை யிருந்தது. முதலில் எளிய உரையைக் கற்பவன் பின்னர் அந் நூலுக்குப் பலரும் எழுதிய உரைகளையெல்லாம் படிக்க எண்ணங்கொள்வான் என்பது அவர்தம் கருத்தாக இருக்க

லாம். மற்றும், கம்பராமாயணத்தையும் நல்ல பதிப் பாக வெளியிடவேண்டும் என்ற ஆர்வமுங் கொண் டிருந்தார்.

தாம் அறிந்தவரையில் தமிழ் மொழிபோல் இனிய மொழியைக் கண்டதில்லையெனப் பாரதியார் கூறினர். சண்முகனர், 'ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் அடிப் படையில் ஒரே உருவத்துடன் வாழும் மொழி தமிழ் ஒன்றேதான்' என்றுரைத்தார்.

மேலும், 'உலக நாகரிகம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான வாழ்க்கைத்துணை நூல்' என்றும், 'உலகத்தை அழிக்கவல்ல பேராற்றல் அணுவில் இருக் கிறது என்பதை விஞ்ஞானநூல் நிறுவிவிட்டது: இரண்டு வரிகள்கொண்ட சிறு குறள் வெண்பாவில் உலகத்தைக் காக்கவல்ல பெரிய உண்மை இருக்கிறது என்பதை எத்துணைப்பேர் அறிந்திருக்கிறார்கள் ?' என் றும் கூறும் சண்முகனருடைய கருத்துக்கள் திருக்குற ளின் உயர்ந்த பண்பையும் ஈரடியால் உலகையெல்லாம் அளந்த சிறப்பினையும் எவ்வளவு இனிமையாக எடுத் துக் காட்டுகின்றன !

மற்றும், அவர் திருக்குறளைப் பாராட்டப், 'பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே !' எனக்கூறிய தொடர் கம்பராமாயணப் பயிற்சி யையும் புலப்படுத்துகிறது.

அரசியல் அறிஞராகிய சண்முகனர் 1944-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்திய மக்கள் தமக்கு இங்கி லாந்து தரவேண்டிய ஆயிரத்துநூறு கோடி ரூபாவும் வருமோ வராதோ எனக் கலங்கியிருக்கும் நிலையை

ஓரிடத்தில் எடுத்துக்காட்டி, இக்காலத்திற் கம்பன் இருந்திருந்தால், 'கடன் கொடுத்தார் நெஞ்சம்போலக் கலங்கினன் இலங்கை வேந்தன்' எனப் பாடியிருப்பான் என்றனராம். 'கடன் கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கினன் இலங்கை வேந்தன்' என்பது கம்பன் வாக்கு.

இவ்வாறு அரசியலுலகிலும் தம் தமிழ்நூற் பயிற்சியைப் பயன்படுத்திக் கலந்து உலகிற் குணர்த்தும் திறம் இவருக்குண்டு.

ஒருமுறை,

"பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றங் கொண்டிச் சேனை செல்வது'

என்று கூறும் செங்குட்டுவன் கூற்றை எடுத்துப் பயன்படுத்தினர்.

மற்றொருமுறை, 'பசியும் பிணியும் பகையும் நீங்கி' என்ற இளங்கோவடிகள் வாக்கையும் அட்லாண்டிக் சாசனத்தையும் ஒப்பிட்டுக் காட்டினர்.

வேறொரு வாய்ப்பிலே,

"நிலம்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே!
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே"

என்னும் புறநானூற்றுப் பகுதியை எடுத்துக்காட்டிக் குடிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை நன்கியற்றித் தர வேண்டும் என்று கூறியுள்ளார். 'நிலத்திலே வாய்க்கும் இடம் எங்கும் நீர் நிலைகளைப் பெருகும்படித் தேக்கித் தந்த அரசர்கள் உலகின் உள்ளத்திலே இடம் பெறுவர்;

அல்லார் இடம் பெருர்' என்பது அச்செய்யுட் பகுதியின் கருத்து.

அரசியல் அறிஞர்கள் இலக்கிய அறிஞராகவும் இருந்தால் அத் தகுதி எவ்வாறு நன்கு பயன்படும் என்பதற்குச் சண்முகனுர் சான்ருயினுர்.

சில ஆண்டுகட்கு முன்னர்க் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களை அவர்தம் இருக்கையை நாடிச் சென்று, தாமும் சர். முத்தையா செட்டியாரவர்களுமாகப் பொன்னுடை போர்த்து, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே கௌரவப் பேராசிரியராக இருக்கும்படி அழைத்ததும், தருமபுர ஆதினத்தார் திரு. ரா. பி. சேதுப் பிள்ளையவர்களுக்குச், 'சொல்லின் செல்வர்' எனப் பட்டமளித்தபோது, தலைமையேற்றுப் பாராட்டியதும் இன்னேரன்ன பல நிகழ்ச்சிகளும் சண்முகனுர்க்குத் தமிழ்ப் புலவர்களிடம் இருக்கும் மதிப்பைக் காட்டுகின்றன.

1950-ஆம் ஆண்டு மே மாதத்திற் கோவையில் நடந்த தமிழ் விழாவிலே, உயர்நிலைப் பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திலே தாய்மொழியை விட்டுவிட்டு இந்தியை அதற்கு ஒப்பாக எடுத்துக்கொள்ளலாம் என விதி செய்திருந்த அரசாங்கச் செயலை நம் சண்முகனுர் அழுத்தமாகக் கண்டித்தனர். இவரும் சர். முத்தையா செட்டியாரும் அன்றே சென்று முதலமைச்சரிடம் பாடத் திட்டத்தை மாற்றியமைக்கும்படி உறுதி பெற்றனர். நம் தாய்மொழியாகிய தமிழை ஒவ்வொரு மாணவனும் தவருது கற்கவேண்டும் எனவும், விருப்பமிருந்தால் இந்தியைப் படிக்கலாம் எனவும் அரசாங்கத்தார் பின்னர் செய்த தாய்மொழி ஆக்கத் திட்டம் சர். சண்முகனுரின் முயற்சியாலேயே ஆயிற்று.

மற்றும் தமிழ்நாட்டிற் கலைக் களஞ்சியம் வெளியா வதற்கு மத்திய அரசாங்கம் ஐந்திலட்ச ரூபா வழங்குவ தற்குக் காரணமாக இருந்தவர் சண்முகனாரேயாவர்.

வசந்தம் என்றொரு தமிழிதழ் சண்முகனாரின் ஆதரவிலே வெளியாற்று.

இவ்வாறு இயற்றமிழ்ப்பணி பல, சண்முகனாராற் செய்யப் பெற்றன.

இசைத் தமிழ்ப்பணி

தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னரே இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் இருந்தன என்று அறிகிறோம். சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியத் திலும் இசையையும் நாடகத்தையும் பற்றிய சிறந்த சில குறிப்புக்களும் இசைநூல்கள் நாடக நூல்களின் பெயர் களும் காணப்படுகின்றன. நிலங்களை ஐவகைப்படுத்தி, அவ்வந் நிலத்து மக்கள் கைக்கொண்ட பண்கள் இன்ன வென்றும் அவற்றிற்குரிய யாழ் இன்னவென்றும் தமிழ் நூல்களிலே கூறப்பட்டுள்ளன. மற்றும் குறிஞ்சி நிலத் திலே குறிஞ்சிப்பண் கேட்ட யானைகள் தாம் வாய்க் கொண்ட தினைக்கதிர்கள் சோர மெய்ம்மறந்து நிற்கும் என்றும் தமிழ் நூல்கள் கூறியுள்ளன. பெருங்கதை யிலே உதயணன் தன் இசையினாலே மதம்பிடித்த யானை யையும் வயப்படுத்தினான் என்பது கூறப்பட்டுள்ளது. சிந்தாமணியிலே சீவகன் யாழினாலே காந்தருவ தத்தையை வென்றான் என்பதும், யாழ்கள் பலவற் றிடையே சிறந்த யாழைத் தேர்ந்தெடுத்தான் என்பதும் கூறப்பட்டுள்ளன சைவ சமயப் பெரியார்களும் ஆழ் வார்களும் இசையினாலே மக்களைச் சமயப்பற்றுக் கொள்ளச் செய்ய விரும்பித் தேவாரங்களையும் திருவாய்

மொழிகளையும் பாடியருளினர் என்பதை யாவரும் அறிவோம்.

இறைவழிபாட்டிற்கு இசை சிறந்ததென்று கருதியே இறைவன் திருக்கோயில்களிலே பண்ணோடு இசை பாடுதலை இன்றளவும் கைக்கொண்டுள்ளனர். 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்றும், 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்' என்றும் இறைவன் இசைக்கு வயப்படுதலைப் பெரியோர் கூறியுள்ளனர். அருணகிரி நாதர் பாடிய இனிய திருப்புகழிசை நம் காதுகளிலே முரன்று மெய்ம்மறக்கச் செய்கின்றது. மார்கழித் திங்கள் வைகறையிலே மணிவாசகரின் இனிய திருவெம்பாவையும் ஆண்டாளின் அமுதனைய திருப்பாவையும் தேவாரமும் திருப்புகழும் இனிய இசையுடன் நம்மை எழுப்பி இன்ப வெள்ளத்திலே மிதக்கச் செய்கின்றன.

பெரும்புலவர் டாக்டர் உ, வே. சாமிநாதையரவர்கள் தமிழ்க் கீர்த்தனைகளை இயற்றிய புலவர்கள் என முத்துத் தாண்டவராயர் முதலாக முப்பத் தெண்மர் பெயர்களை அண்ணாமலை நகரில் 1944-இல் நடந்த தமிழிசை மாநாட்டுக்கு எழுதிவிடுத்தனர்.

இவ்வளவேன், தமிழ்நாட்டிலே வண்டியோட்டியும் உழவனுங்கூடத் தம் இனிய இசைகளால் எருதுகளை வயப்படுத்தி வேலை வாங்குகின்றனர். தாய் தன் குழந்தையைத் தமிழிசையாலே தாலாட்டித் தூங்கவைக்கிருள். பாம்புப்பிடாரன் இசையினாலே பாம்பை மெய்ம் மறக்கச் செய்கின்றனன்.

இவ்வாறு வெளிப்படையாக நோக்கினும் தமிழிசையின் இடையறு நிகழ்ச்சியை அறியலாம். தமி

மூக்கே உரிய பண்ணும் இசையும் இருக்கவும் கரு நாடக இசையினும் தமிழ்ப்பாட்டுக்கள் எழுந்துள்ளன.

'குழலினிது யாழினிது என்ப, தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.'

எனக் கூறுமாறு குழலும் யாழும் இசைக் கருவிகளாய்ப் பலவகையானும் விரிந்து கிடந்தன.

இத்தகைய தமிழ் நாட்டிலேதான் தமிழில் இசை யில்லையென்று சில ஆண்டுகட்கு முன்னர்ச் சிலர் கூச்ச லிட்டனர். அதனாலேயே 1940-ஆம் ஆண்டிலே தமி ழிசை வளர்ச்சிக்காக ஓர் இயக்கம் எழுந்தது. தமிழ் நாட்டின் பண்புக்குச் சான்றாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே 16-11-40-இல் நடந்த பட்டம் அளிப்பு விழாவில் தமிழிசை வளர்ச்சிக்காகப் பதினா யிரம் ரூபாக்களைச் செட்டிநாட்டரசர் சர். அண்ணாமலைச் செட்டியார் நன்கொடை நல்கினார்கள். இரண்டாம் முறையாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயே 1941-ஆம் ஆண்டு ஆகஸ்டில் 14-ஆம் நாள் முதல் 17-ஆம் நாள்வரை தமிழிசையே பாடும் இசையரங்குகள் ஐம்பது நடந்தன. முதல்நாள் முதலாவதாக இசையரங்கு நிகழ்த்திய அரியக்குடி இராமானுச ஐயங்கார் தாம்பாடிய ஐந்துபாட்டுக்களையும் தமிழாகவே பாடியது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு தமிழிசை இயக்கத்திலே முதலிற் பங்கு கொண்ட இசைப் புலவர்களின் உள்ளங்கள் எப்படியோ முரண்பட்டுவிட்டன. அவர்கள் ஆராய்ச்சியை என் னென்பது! சிலர், 'தமிழில் இசை வாராது' என்றனர். சிலர், 'வர்ணமில்லை, கீதம் இல்லை!' என்றனர். சிலர், 'தமிழிற் பாடுவது தியாகையர் கீர்த்தனைகளைப் புறக்

கணிப்பதாக முடியும்' என்று வேதாந்தம் பேசினர். சிலர், 'எங்கள் ஆசிரியரின் ஆணை' என்றனர். சிலர், 'முதலில் மட்டும் தமிழில் பாடமுடியா' தென்றனர். சிலர், 'மங்களம் தெலுங்கிலேதான் பாடுவோம்' என்றனர். சிலர், 'உங்களுக்குத் தமிழ்; அவர்களுக்குத் தெலுங்கு' என்றனர். வேறொரு சார்பினர், 'இது பாகிஸ்தான்' என்றும், 'தமிழ் கிளர்ந்தெழுந்தால் மற்றைய மொழிகள் மறைந்துவிடும்' என்றும் புலம்பினர். மற்றுஞ் சிலர், 'தமிழ்ப் பாட்டுப் பாடினுல் சங்கீதத்தின் தரமே போய்விடும்' என்றும் கதறினர்.

தமிழிசையை வெறுப்போர்,

"தமிழ் இசைக்குத் தக்கதன்று. தெலுங்கிலும் வடமொழியிலும் உள்ள நயம் தமிழுக்கு வராது. இசைக்கு மொழி வேறுபாடு இல்லை. அது 'நாதவித்தை' அதில், 'பாஷைப் பிரச்சினையைப்' புகுத்தக்கூடாது. தமிழிற் பாடினுற் கலை நயம் கெடும். சங்கீதத்தின் மாற்றுக் குறையும்; மதிப்புக் கெடும். பாட்டு அருளால் வரும்; பொருளால் வராது. ஏதோ சிலர் பணத்தைக் கொட்டி இசையைப் பாழாக்கப் பார்க்கிறுர்கள். அது, 'கர்நாடக சங்கீதத்'தையே காலை வாரி அடித்துவிடும். தமிழில் உயர்ந்த பாடல்கள் இல்லை." என்று மனம் போனவாறு ஆங்காங்கே அழுத்தந் திருத்தமாகக் கண்டித்தனர். இவ்வாறு கூறியவர்களும் தமிழ் மக்களே யாவர்.

இங்ஙனம் மூன்ருண்டுகள் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் எழுந்த கூச்சல்கள் தமிழ்ப்பற்றுடையோர் நெஞ்சைத் தட்டி எழுப்பின.

செட்டிநாட்டரசர் சர். அண்ணுமலைச் செட்டியார், "தமிழ் நாட்டில் தமிழர் கேட்டு இன்புறுதற்குத் தமிழி

சைப் பாடல்கள் அல்லவா பாடப்படல் வேண்டும்! பொருள் தெரியாத வேற்று மொழிப் பாடல்களால், தமிழர் பொருளுணர்ச்சியுடன் இசையின்பத்தை நுகர இயலவில்லையே! சங்க காலத்திலும் சமய காலத்திலும் தமிழகத்தில் தனியாட்சி புரிந்த தமிழிசைக்குரிய இடத்தைப் பிறமொழிப் பாடல் கவர்ந்து கொண்டதே!" என வருந்தினர்.

இவ்வாறு வருந்திய அப் பெரியாரையும் நம் சண்முகனாரையும் தலைவர்களாகக் கொண்ட செயற்குழுவொன்று கூடியது. முதன் முதலாக 23-12-1943-இல் தமிழிசைச் சங்கம் கூடியது. பல தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழிசையை வெறுப்போருடைய கூற்றுக்களைத் தகுதியான காரணங்களாலே மறுத்துப் பேசினர். அறமன்றத்தின் எதிரில் உள்ள 'செயின்ட் மேரிஸ் ஹா'லில் 4-1-44 வரையில் தமிழிலேயே இசையரங்குகள் நடைபெற்றன.

23-12-43-இல் அவ்விழாவிலே நம் சண்முகனார் கூறிய பொன்மொழிகள்:

"மக்களின் இயற்கை சாப்பாடு, இன்னிசை, காதல் என்னும் இம் மூன்று துறைகளிலும் தன் தாய் நாட்டிற்கு உரிய வற்றையே விரும்பும். அமெரிக்காவிற்குச் சென்றபோது, அங்கே மிக்க செலவிற் செய்யப்பட்ட அறுசுவை உண்டிகளை நான் உண்டேன். ஆயினும், நம் நாட்டு இட்டிலி முதலியவற்றில் உண்டான சுவை அந் நாட்டு அறுசுவை உண்டியில் எனக்கு ஏற்படவில்லை. இசையும் அப்படியே. தமிழ்ப் பாட்டைக் கேட்கும் போதுதான் எனக்கு உயிரமைதி ஏற்படுகின்றது. செவியுணவிலும் வாயுணவிலும் என் நாடே எனக்கு ஏற்றது என்பது என் பழக்கத்திற் கண்ட உண்மை. உலகி

லேயே எந்த நாகரிக—நாகரிகமற்ற நாட்டிலும் மக்கள் தத்தம் தாய் மொழியை விட்டு அயல் மொழிகளில் இசை பாடுவதைக் கேட்டதுமில்லை; கண்டதுமில்லை. இது மட்டுமா? தமிழர்கள் தம் வாழ்க்கைத் துறைகள் பலவற்றையும் அயல் மொழிகளில் நடத்துவதே வழக்க மாய் இருக்கின்றது; இசைக்குத் தெலுங்கு; அலு வலுக்கு ஆங்கிலம்; சடங்குக்கு வடமொழி; நாட்டுத் தொண்டுக்கு இந்தி. போதாக் குறைக்குப் பொதுப் பேச்சுக்களிலே, 'ஹலோ குட்மார்னிங் சார்! எப்போ வந்தாப்பலே? ஹௌ ஆர் யூ கெடிங்கான்? மஸ்தா சாப் பிடணும். மதர் சௌக்கியமா?' என்று பன்மொழிக் கலவைக் கொச்சைவழூப் பேச்சு. இந்த அவியல் வழக் குப் பெண்களிடையிலும் பரவத் தலைப்பட்டுவிட்டது. நம் தமிழை இழந்து நாம் இவ்வாறான இழிந்த நிலைமை யில் உள்ளோம். இம் முறைக் கேடுகளை நம் தமிழ் நாட்டிலிருந்து வெருட்டி ஓட்டி, நம் தமிழ்த்தாயைச் சிறப்பிக்கவே, நாம் இக் கிளர்ச்சியில் இறங்கியுள் ளோம்."

எத்துணைப் பொருள் பொதிந்த பேச்சு! ஆங்கிலத் திலேயே படித்துப் பட்டம் பெற்று, மேனாடுகள் பல வற்றிலும் பழகி, எல்லோரும் வியக்குமாறு ஆங்கிலத் திலே சொற்பொழிவாற்றிப் புகழ்பெற்ற சண்முகனாரின் கருத்தை நோக்குக! இத்தகைய கருத்து எல்லாத் தமிழ் நாட்டுத் தலைவர்கட்கும் உண்டானால் அன்றோ தமிழ் சீர்பெறும்?

இவ்வாறு தாய்மொழியையும் தாய்மொழியிசையை யும் வளர்க்க ஓர் இயக்கம் தோன்றவும் அதிலே பல பேரறிஞர்கள் பங்கெடுத்துக் கொள்ளவும் நேர்வது

அந்த நாட்டின் சீர்கேடான நிலையைக் குறிக்கும் என்றும் இந்த நிலை தமிழ் நாட்டிலே அன்றிப் பிற நாடுகளில் இல்லை என்றும் எண்ணி யெண்ணி இவர் வருந்துவார்.

ஒரு முறை ஒரு நண்பர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி உரையாடும்போது, 'நம் தமிழ் வளர்ச்சிக் கழகம் மாதிரி மற்ற நாடுகளில் இருந்தால் கொஞ்சம் சொல்லுங்கள்' என்றார்.

'பிற நாடுகளிலே தமிழ் நாட்டைப்போல மொழி வளர்ச்சிக்காக உழைப்பதில்லை; தமிழ் நாட்டில் மொழிப் பற்றே இக் கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழ் முழக்கம் செய்யத் தூண்டுகிறது. பிறமொழியினருக்கு அவர் மொழியிலே இத்துணைப் பற்றில்லாததாலேதான் இவை போலத் தோன்றவில்லை' என்பது அந்த நண்பரின் கருத்து. அவருக்குத் தமிழ்நாட்டின் இத்தகைய உயர் நிலைபற்றிய பெருமகிழ்ச்சியே இவ்வாறு வினவத் தூண்டியது.

அம்மொழி கேட்ட சண்முகனார் நகைத்தவாறே, "அப்படிக் கேளுங்கள் ஐயா! நன்றாகக் கேளுங்கள்! தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழிசைச் சங்கம் போன்ற இக்கழகங்களை ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன் போன்ற இடங்களில் ஏற்படுத்தி உழைத்தால் அதற்குப் பொருளுண்டு. ஆனால், தமிழ் நாட்டில் தமிழை வளர்க்க ஒரு கழகம், தமிழில் பாட ஒரு சங்கம் என்றால், இதன் அர்த்தம் என்ன? தமிழன் இதைக்கண்டு துக்கிப்பதா? சந்தோஷப்படுவதா?" என்று வருந்தினார்.

நோயினால் மெலிந்தவன்தானே உடல்வலிமைக்குரிய மருந்தை உண்ண வேண்டும்?

பின்னர் 4-1-44-இல் அவ்விழாவின் இறுதியிலே கூறியதையும் நோக்குவோம்:

" நம்முடைய இயக்கத்துக்கு ஒருவகையான அபாயம் இருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது. நம்முடைய நாட்டை ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் தான் ஆண்டுவருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த உத்தியோகஸ்தர்களைத் தெய்வப் பிறவி என்று சொல்வது வழக்கம். இவர்கள் எந்தக் காரியத்திலும் நிபுணர்கள். இவர்களுடைய சாமர்த்தியம் எல்லாம் நம்முடைய தலையில் விடியும்போல் தோன்றுகிறது. இவர்களிற் சிலர் சங்கீத நிபுணர்கள். இவர்களுடைய சாமர்த்தியம் சங்கீதக் கலையையும் விடவில்லை. ஆனால், எங்கள் துர்ப்பாக்கியம் இவர்களுடைய அபிப்பிராயம் தமிழிசை இயக்கத்திற்கு விரோதமாக இருக்கிறது. இவர்களுடைய எதிர்ப்புப் போதாது என்று சில ஹைக்கோர்ட் ஜட்ஜுகளும் நமக்கு விரோதமாகக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறார்கள்; இவர்களுடைய எதிர்ப்பையும் விரோதத்தையும் இவர்கள் பலமாகக் காட்டி வருகிறார்கள். என்னைப்பொறுத்த மட்டில் இதைப்பற்றிக் கவலையே இல்லை. ஆனால், நம் நாட்டு மக்களிற் பெரும்பான்மையோர் இந்த எதிர்ப்பினாலே பயந்துவிடுகிறார்களோ என்று தோன்றுகிறது. நம் நாட்டில் அடிமைத்தனமான மனப்பான்மையும், உத்தியோகஸ்தர்களைக் கண்டாற் பயப்படுவதும் பூராவும் போகவில்லை. ஓர் ஊரில் கலெக்டர் தமிழிசைக்கு விரோதம் என்றால் சிலராவது இந்த இயக்கத்திற் சேரப் பயப்படுவார்கள். ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் விரோதம் என்றாற் பல கட்சிக்காரர்கள் பயப்படுவார்கள். நம்முடைய மக்களின் மனப்பான்மையை உத்தே

சித்து. உத்தியோகங்களில் இருக்கிறவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம். உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய கடமையை அறியாவிட்டாலும், தமிழ் மக்கள் இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயப்படக்கூடாதென்று நான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன்.''

இந்தப் பேச்சிலே அந் நாளில் தமிழிசை இயக்கத்திற்கு இருந்த எதிர்ப்பையும் அந்த நேர்மையில்லாத எதிர்ப்புக்களுக்கு அஞ்சாமல் அவற்றைத் தகர்த்தெறியும் சண்முகனாரின் திறமையான பேச்சுவன்மையையும் காணலாம்.

தமிழிசை விழா நன்கு நடைபெற உதவியவர்களில் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் புதல்வர்களில் சிதம்பரஞ் செட்டியாரும் ஒருவர். சண்முகனார் இசை விழா முடிவில் நன்றி கூறும்போது, 'இசை விழா சரிவர நடைபெறப் பல தொண்டர்கள் சிரமம் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ராஜா அவர்களின் புதல்வரான சிதம்பரஞ் செட்டியாரவர்களை நான் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியிருக்கிறது.' என்று கூறி மேலும் அவர் ஊக்கத்தையும் பாராட்டினார்.

அவ் விழாவிலே நிறைவேறிய தீர்மானம்:—

க. ''சென்னை ரேடியோ நிலையத்தில் 100-க்கு 40 வீதம் தமிழ்ப் பாட்டுப்பாட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ரேடியோ அதிகாரிகளை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.''

உ. ''தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் திருச்சி ரேடியோ நிலையத்திற் பாட எல்லா வகுப்பினருக்கும் சமமான பங்கு

கொடுக்கவேண்டும் என்றும், பாடல்களில் 100-க்கு 80 வீதம் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் ரேடியோ அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது."

நம் நாட்டிலே தோன்றும் இயக்கங்களின் தீர்மானம் பெரும்பாலும் புரட்சித் தன்மையுடன் இருப்பதும் செயல் முறையிலே இடர்ப்படுவதும் வழக்கம். ஆனால், தமிழிசைச் சங்கத்தின் தீர்மானம் அவ்வாறின்றிச் செயல் முறைக்கு ஏற்றதாக இருப்பது காண்க.

இனி, தமிழிசைச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவிலே வரவேற்புக் கழகத் தலைவராகப் பங்கெடுத்துக் கொண்ட திவான்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் கூறியவை :

" தமிழிசைக் குழந்தை பிறந்து இரண்டு வருடங்களே ஆயின. ஆயினும் இவ்வளவு சீக்கிரத்தில் எதிர்காலத்தின் சிறப்பிற் கேற்றபடி, தன் திருமுகத்தைக் காட்டி ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் நம் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களும், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்களுமே. இவர்கள் நமக்குக் கிடைத்த மாபெருந்தலைவர்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் எந்த இயக்கமும் பழுதுபோகாது. எதையும் ஆராய்ச்சியில்லாமல் ஆரம்பிக்கமாட்டார்கள் ; எண்ணாமல் துணியமாட்டார்கள் ; துணிந்தபின் பின் வாங்கமாட்டார்கள். ஆழ்ந்த அறிவு, பரந்த நோக்கம், தீராத உழைப்பு, தேசசேவை இவைகளை அங்கமாக உடையவர்கள் ; கல்வியையும் கலைகளையும் பொதுமக்களிடையே பரப்பவேண்டும் என்று சங்கணம் கட்டிக்

கொண்டு கண்ணும் கருத்துமாகப் பாடுபடுவார்கள்; கலை ரசிகர்கள்; நம் நாட்டிலே தோன்றியிருக்கும் அணி விளக்குகள்! இவர்கள் இச் சங்கத்திற்கு எல்லா விதத்திலும் பேராதரவு அளித்துவருகிறார்கள். இவர்களுடைய அடிப்படையான ஆதரவு இல்லாவிட்டால், நமது உள்ளத்தில் இயற்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த இயக்கம் இவ்வளவு சீக்கிரத்தில் உருவெடுத்து வெளிவந்து, தாராளமாகத் தலையெடுத்து உலவுவது கஷ்டமாக இருந்திருக்கும். இப் பெரியார்கள் இருவரும் செய்துவரும் பேருதவிக்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? இவ்விருவரையும் மனமார வாழ்த்துவதே நாம் செய்யும் கைம்மாறு.''

ஓர் இயக்கத்தை நடத்தி நாட்டுப் பணிபுரியும் விருப்பம் எல்லோருக்கும் ஏற்படலாம். எனினும், 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்றாங்கு, அவ்வியக்கம் நடைபெறப் பொருள் வேண்டும். பொருளிருந்தாலும் நடத்தும் திறமையும் வேண்டும். மனமும் பொருளும் திறமையும் ஒன்று கூடியவர்க்கே ஓர் இயக்கத்தை நடத்திப் பயன்பெற இயலும். பொருளிருந்தால் மனமிராதவர்களும், மனமிருந்தாற் பொருளிராதவர்களும், இவ்விரண்டுமிருப்பினும் திறமையிராதவர்களுமே உலகினிற் பெரும்பாலோர். செட்டிநாடாகிய மலர்ப் பொய்கையிலே தோன்றிய இந்த இரண்டு நறுமண மலர்களும் தமிழ்ப் பூங்காவிலே நறுமணங் கமழ்ந்து திகழ்வதற்கு மேலே கூறிய முத்திறமும் ஒருங்கே அமைந்ததுதான் காரணமாகும்.

தமிழ் நாட்டு வார வெளியீடொன்று தமிழிசை இயக்கத்தை நகைக்குங் கருத்துடன் நகைச்சுவை யோவி

யம் ஒன்றை வெளியிட்டிருந்தது. 4-1-44-இல் நம் சண் முகனுர் அதைக் குறிப்பிட்டுப் பேசும்போது,

"தமிழிசை இயக்கம்பற்றிக் கேலியாக..........பத்திரிகையில் ஒரு ரசமான சித்திரம் வெளிவந்தது. நான் அந்தச் சித்திரத்தை ரொம்பவும் கவனித்து அனுபவித்தேன். வானத்தில், சங்கீதம் என்னும் பெயர்கொண்ட ஒரு வானம்பாடி பறந்துகொண்டிருக்கிறது. இராஜா. சர். அண்ணுமலைச் செட்டியார், 'பாஷைக் கட்டுப்பாடு' என்ற ஒரு கூண்டை வைத்துக்கொண்டு, அந்த வானம் பாடியைப் பிடிக்க முயற்சிக்கிருர். ஆனுல் வானம் பாடியோ அவருடைய சூழ்ச்சிக்கு அகப்படவில்லை." என்ற கருத்துடன் அவ் வோவியம் வரைந்திருந்ததாகக் கூறி, மேலும், "இந்தச் சித்திரத்தைப் பார்த்தபோது, எனக்கு வேறே ஓர் அர்த்தம் புரிந்தது. 'கூண்டு ஒரு கர்நாடக சங்கீதம். அக்கட்டுப்பாட்டில் அடைபட்டிருந்த வானம்பாடியை இராஜா. சர். அவர்கள், கூட்டைத் திறந்து தமிழ் வான வெளியில் விட்டு விட்டார்கள்.' என்பதையே இப்படம் குறிப்பதாகக் கருதுகிறேன்" என்றனர்.

அவ்வார வெளியிட்டு தமிழிசை இயக்கத்தை மறுக்கும் முறையிலே வெளியிட்ட அவ் வோவியம் தமிழிசை இயக்கத்தை ஆதரிக்கும் முறையிலே அமைந்திருப்பதே பொருத்தம் என எடுத்துக் காட்டிய நம் சண்முகனுரின் உணர்ச்சியை எண்ணி மகிழ்க!

இசைத்தமிழ்ப் பணியிலே இங்ஙனம் கருத்தூன்றிய சண்முகனுரின் தொண்டிலே பாராட்டக் கூடிய மற்ருெரு தொண்டு பண்ணுராய்ச்சியாகும்.

பண்ணாராய்ச்சி

முற்காலத்தில் தமிழ்நாடு ஒழுக்கம்பற்றி நால்வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதனால், நானிலம் என்னும் பெயரும் எழுந்தது. அந்நில மக்கள் கைக்கொண்ட யாழும் பண்ணும் இவையென வரையறையுஞ் செய்தனர். அம்முறைப்படி எழுந்த பண்ணின் பிரிவு இசையாகும். இப் பண்ணும் இசையும் இடைக்காலத்தே குறைவுற்றன. வளர்ந்திருந்த நூற்று மூன்று பண்ணிலே தேவாரத்திலே காணப்படுவன இருபத்து நான்கே.

இக்காலத்தே அந்த இருபத்து நான்கு பண்களுமேனும் தமிழ் நாடெங்கும் ஒரே அமைப்பாக வழங்கவில்லை. தமிழ் நாட்டுத் திருக்கோயில்களிலே தேவாரம் பாட முதலில் ராஜராஜ சோழன் காலத்திலிருந்தே ஓதுவார்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மற்றும், ஆங்காங்கே ஓதுவார்களை ஆசிரியர்களாகக்கொண்ட தேவாரப் பள்ளிகளும் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் தேவாரம் கற்கின்றனர். பல நகரங்களில் தேவாரச் சபைகள் உள்ளன. என்றாலும், பண்கள் ஒரே முறையாகப் பாடப்படவில்லை. ஒவ்வொரு பண்ணும் ஒவ்வொரு முறையாகப் பாடப்படுகின்றன. ஏன் இவ்வாறு வேறுபட்டுள்ளன என்றால், அவ்வாறேதான் ஆங்காங்கே பாடப்படுகின்றன என்று ஓதுவார்கள் ஓதுகின்றனர்.

இவைகள் எவ்வாறு அறியப்பெற்றன? சண்முகனாரின் முயற்சியாலே மூன்றாண்டுகளாக நடைபெற்ற பண்ணாராய்ச்சிக் கூட்டத்தினாலேதான் தெரியவந்தன. நம் நாட்டிலே சைவப் பணிக்கெனச் சாலவும் பொருள் வருவாயுள்ள சைவமடங்கள் இருக்கின்றன. கற்றுவல்ல அறிஞர்கள் பண்டார சந்நிதிகளாக மடங்களிலே தலைமை பெறுகிறார்கள். எனினும், சைவத் திருமுறை

யாகிய தேவாரம் தமிழ்நாடெங்கும் இனிய நல்ல ஒரே முறையான இசையுடன் பாடுவதற்கு வழிசெய்யாமல் விட்டுவிட்டார்கள். உள்ளினும் உள்ளம் சுடும் இத்தகைய வெட்கக்கேடான குறை நீங்கும் காலமும் வந்தது, தமிழன்னையின் தவப் புதல்வரான சண்முகனாரின் உள்ளம் தேவாரத்திலே ஊன்றியது; தமிழ் நாட்டிலே தேவாரம் பொருளறியாமலும் ஓதிவருவது நீங்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வதே இறைவன் அருளுக்கிடம் என்ற பெரியோரின் கருத்தை அவர் ஏன்றுகொண்டார். தமிழிசைச் சங்கத்தின் ஏழாம் ஆண்டு விழாவிலே, பெரு முயற்சியுடன் பண்ணாராய்ச்சியைத் தொடங்கி மூன்றாண்டுகள் நடத்தினர்.

இவ்வாராய்ச்சிக் குழுவை 24-12-49-இல் தொடங்கி வைத்த நம் சண்முகனார் தம் தொடக்கவுரையிலே கூறியவை :

"நம் முன்னோர்கள் நமக்குத் தந்துள்ள இசைச் செல்வத்தை—அதன் பெருமையை—யாவரும் உணரும்படி செய்வதே இவ் வாராய்ச்சிக் கூட்டத்தின் நோக்கம். நம் இசையின் உயிர்நாடியான பண்களைப்பற்றி ஆராய்வதென்ற முடிவுக்கு வந்தோம். முதலில், தேவாரப் பண்களை ஆராய்ந்து திட்டப்படுத்துவது அவசியம் என்று கண்டோம். அதன்படியே தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் தேவாரப் பண் இசைக்கும் பாடகர்களை (ஓதுவார்களை) இங்கு வரவழைத்துள்ளோம். பண்ணோடு சேர்ந்த இசை மக்களது உள்ளத்தைத் தொடும்படியான ஒரு கலை. தமிழிசை வளர்ச்சிக்கு இக் கூட்டம் மிகுந்த பயனைத் தரும் என்ற மகிழ்ச்சியோடு இந்த ஆராய்ச்சியைத் தொடங்கி வைக்கிறேன்."

இது அவருடைய நோக்கம் என்ன என்பதை வெளிப்படுத்துகிறது.

முதலாண்டு நடந்த பண்ணாராய்ச்சிக் கூட்டத்திலே, ஓதுவார்கள் தமக்கு வேண்டிய அளவேனும் இலக்கண விலக்கியப் பயிற்சி இல்லாதிருப்பதை நம் சண்முகனார் கண்டார். இலக்கண இலக்கியப் பயிற்சியுடைய புலவர்கள் இசைத்துறையிலே பயிற்சியில்லாதிருப்பதும் இசையிலே வல்லவர்கள் இலக்கண இலக்கியப் பயிற்சியில்லாதிருப்பதும் நம் நாட்டிலே பெரும்பான்மையான நிலையாகும்.

இந்நிலையெண்ணி வருந்திய சண்முகனார், இரண்டாம் ஆண்டுப் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில்,

"தமிழில் இலக்கியம், இலக்கணம், இசை இம்மூன்றையும் தனித்தனியே படித்தாற் பயனில்லை. மூன்றையும் சேர்த்தே பயிலவேண்டும். இசைவாணர்கள் எல்லோரும் இலக்கிய இலக்கணப் பயிற்சியையும் வளர்த்தல் வேண்டும்" என்று கூறினர்.

மூன்றாண்டுகள் நடந்த பண்ணாராய்ச்சிக் குழுவிலே, நம் சண்முகனார், ஓதுவார்களிடையேயும் மற்றும் உள்ள இசைவாணர்களிடையேயும் அமர்ந்திருந்து, ஒவ்வொரு பண்ணையும் ஓதுவார்கள் வேறு வேறு முறையாகப் பாடுவதைக்கேட்டு, அவற்றிலே ஒற்றுமையைக் கண்டு பிடித்து, இப்பண் இக்காரணத்தாலே இக்கால இராகத்திலே ஒப்புமை கொள்கின்றதென முடிவுசெய்வதை அறிந்து மகிழ்ந்து, தொடக்க வுரையும் நன்றியுரையுங் கூறி, ஊக்கம் ஊட்டிவந்தது மனமும் கண்ணும் செவியும் களிக்கும் விருந்தாக இருந்தது.

பண்ணாராய்ச்சி நடத்தப் பொருள் வருவாய் கண்டு பிடித்து, வந்த ஓதுவா மூர்த்திகட்கு வரவும் போகவும் இங்கே தங்கியிருக்கவும் நேர்ந்த செலவுகட்குப் பொருள் கொடுத்து, ஓதுவா மூர்த்திகளிடையே வேற்றுமை யுணர்ச்சி தோன்றுமற் கண்காணித்து நடத்திவந்த பொறுமையும் திறமையும் நம் சண்முகனுர்க்கே உரியவை. அவர் பண்ணாராய்ச்சிக் குழுவினிடையே வீற்றிருந்தது, பழந்தமிழ் மன்னர்கள் தமிழ்ப் புலவர்களிடையே வீற்றிருந்ததை நினைவுறுத்தியதென்று அறிஞர்கள் கூறுவது மிகைப்படுத்தியதன்று. வீற்றிருந்ததுடன் நில்லாமல் ஓதுவார்களிடையே முடிவு காணமல் திகைத்த ஒரு சமயத்தில், 'நீங்கள் இரண்டு நாளும் ஆராய்ந்த கருத்துக்களைப்பற்றி முடிவாக இவ்வாறு எழுதலாமா?' என்று காரணிகர் பணியையும் ஏற்று, அவர்களை ஒப்பும்படி செய்தார்.

இப்பேரறிஞர் பண்ணாராய்ச்சி செய்வார்க்கு ஊக்கமுண்டாக்கக் கூறியவை :

"பண்ணோடு சேர்ந்த பாடல்கள் மக்கள் மனத்தை என்றும் எந்நேரத்திலும் தொடும்படியான பெற்றிமை வாய்ந்தன என்பதும், அவற்றின் தன்மையையும் தோற்ற அமைப்பு முறையையும் ஆராயவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதையும் நாம் நன்கு உணரவேண்டும். இவ் வாராய்ச்சியின் பயனாகத் தமிழ் மக்களுக்குப் புதிய ஊக்கமும் தோன்றக்கூடும். ஆகவே, இங்குக் கூடியிருக்கும் அனைவரும் தத்தம் கருத்துக்கள் யாவற்றையும் உரிமையோடு தெளிவாகக் கூறலாம். எல்லோரும் நல்லமுறையில் ஆராய்ந்து முடிவுகாண வேண்டும்."

சண்முகனார்க்குப் பண்ணாராய்ச்சியிலே இருந்த ஆர்வத்தை அறிய,

"இந்தப் பண்ணாராய்ச்சி ஒன்றிரண்டாண்டுகளிலே முடிந்துவிடவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல; உண்மையை முழுதும் காணும்வரை இது தொடர்ந்து நடக்கவேண்டும். இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பு பிறந்து, இடையே போற்றுவார் அருகிப் போனதால் மங்கியுள்ள பண்களைப்பற்றியுள்ள உண்மை களை இன்று காண்பது எளிதல்ல. ஆனால், அதற்காக ஆராய்ச்சி செய்யாமல் இருக்கமுடியாது. உண்மை காணும்வரை இவ்வாரய்ச்சி தொடர்ந்து நடைபெறும்," என்று ஒருமுறை பண்ணாராய்ச்சிக் குழுவிலே கூறிய வற்றை நோக்குக!

மூன்றும் ஆண்டு பண்ணாராய்ச்சிக் குழு நடை பெற்றபோது சண்முகனார் கூறிய வரவேற்புரையில்,

"பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டத்திலேயே பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டபடி சங்கித இராகங்களுக்கே தாயான தேவாரப் பண்களை ஆராயும் சிறந்த பணியை நாம் தொடர்ந்து நடத்தி வரு கிறோம். இந்த ஆராய்ச்சியில் எத்தனையோ சந்தே கங்கள் தோன்றக்கூடும். இசையரங்குகளில் நம் தேவா ரப் பாடல்களைப் பெரிய சங்கித வித்வான்கள் பாடுவதே அபூர்வம். ஆகையினால், நம் தேவாரப் பொக்கிஷம் பக்தி மார்க்கத்தில் எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் இசை யிலக்கணத்திற்கு அப் பாடல்கள் ஏற்றவையாக இருக்குமோ என்ற சந்தேகம் சிலருக்கு உண்டு. அத் தகைய சந்தேகம் அர்த்தம் அற்றது. ஒவ்வொரு தேவா ரப் பதிகத்திலும் தலைப்பில் அது என்ன பண் என்று

குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதனால் தேவா ரத்திற்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற உண்மையைக் காண்கிறோம். கோயில்களிலே பண்களை ஒட்டிச் சம்பிரதாயமாகத் தேவாரங்களைப் பாடி வருகிறார்கள் என்பதும் தெரியும். ஆகவேதான் தேவாரப் பண்களை ஆராய்ந்தால் நம் பழம்பண்கள் இசைக்கலைக்கு எவ்வாறு உபயோகப்பட்டு வந்தன?—அவற்றிற்கும் இக்கால இராகங்களுக்கும் என்ன தொடர்பு?—முதலிய நுட்பங்கள் தெரியும் என்ற முடிவுக்கு வந்தோம். சென்ற இரண்டாண்டுகளாகப் பண் ஆராய்ச்சியை நடத்தினோம். நமது நல்லதிர்ஷ்டம் முதலாவது கூட்டத்திற்குத் தலைவராகப் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களின் உதவி கிடைத்தது. அவர் தேவாரப் பண்களின் பெருமையை நன்கு புலப்படுத்தினார். தேவாரப் பண்கள் இசைக்கே ஒரு பொக்கிஷம் என்பது தெரியவந்தது.'' என்று பண் ஆராய்ச்சி செய்ய நேர்ந்த காரணத்தையும், ஆராய்ச்சியால் நேர்ந்த பயனையும் கூறினார்கள். இது எத்தகைய நிலை நம் தமிழ் நாட்டிலே தமிழிசைக்குத் தந்திருந்தது என்பதையும், அதனை ஆராய நம் சண்முகனார்க்கு நேர்ந்த ஊக்கத்தையும் காட்டுகிறதன்றோ?

தேவாரம், திருப்புகழ், திவ்வியப் பிரபந்தம் முதலிய தமிழிசைப் பாடல்கள் இருந்தும் அவற்றைப் பெரிய இசைவாணர்கள் பாடாமல்—கர்நாடக இசை வெள்ளத்திலேயே முழுகி வேறெத்துறையிலும் படியாமல்—விட்டதனாலே, 'இராகங்களின் சாயல் முழுதும் உயிர்பெற்றுத் திகழும் பாடல்கள் தமிழில் நிறைய இல்லை. அதனால் தமிழில்மட்டும் இசைவாணர்கள் பாடிவந்தால் நம் இசையின் தரம் குறைந்துபோகும்'

என்று நினைக்கும்படியான நிலை நேர்ந்துவிட்டது. இந்த ஆராய்ச்சிக் குறைவான எண்ணத்தைப் பண்ணாராய்ச்சிக் குழு, பேராசிரியர் சாம்பமூர்த்தி தலைமையிலேயே ஆராய்ந்து தவறெனக் கண்டுபிடித்தது. இதற்குப் பொறுப்பாளர் நம் சண்முகனாரேயாவர். தமிழிசைச் சங்கம் தோன்றிய பத்தாண்டுகளாகப் பல்லாயிரக் கணக்கான தமிழிசைப் பாடல்கள் கர்நாடக சங்கீத முறையிலே புற்றீசல்போலக் கிளம்பியுள்ளன. அவை பாராட்டற் குரியனவே. எனினும், தேவாரம்போன்ற பழந் தமிழிசைப் பாடல்கள் இசையின் முழுப்பயனையும் நுகரும்அளவில் இல்லை என்ற தவறான எண்ணத்தைப் போக்கவில்லை. பண்ணாராய்ச்சிக் குழு ஒன்றே அதனைப் போக்கியது.

மேலும் நம் சண்முகனார் நிகழ்த்திய அவ் வரவேற் புரையில் அவருக்குப் பண்ணாராய்ச்சியில் உள்ள ஈடு பாட்டை,

"இந்த ஆராய்ச்சி ஒரு கடல்போன்றது. இதில் நாம் மிக எளிதில் நீந்திவிடலாம் என்பதை மறந்து விடல் வேண்டும். அயர்ச்சியுறாமல் மேலும்மேலும் தொடர்ந்து ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும். சென்ற இரண்டு ஆண்டுகளிலும் நடத்திய ஆராய்ச்சி யின் பயனாகத் தமிழ்மக்களுக்குத் தமிழ்ப்பண் ஆராய்ச்சி யில் ஊக்கம் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள மடாதிபதிகளையும் கோயில் அதிகாரிகளையும் நாங்கள் அணுகிப் பண் ஆராய்ச்சியின் அவசியத்தையும் பயனையும் விளக்கிக் காட்டினோம். சைவத் திருமடங்களும் கோயில்களும் தம் கடமையாக மேற்கொண்டு போற்றவேண்டிய உயர்ந்த பணி இது

என்பதை எடுத்துக் காட்டினேம்." என்று கூறியவற்ருல் அறியலாம்.

"இந்த ஆராய்ச்சிப்பணி ஓதுவார்களால்தான் இனிது நடைபெற முடியும். சென்ற இரண்டு ஆண்டுகளாக மிகத் திறமையாகத் தம் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இது மிகவும் பாராட்டுதற்குரியது. இன்ன பண்ணிற்கு இன்ன இராகம் என்று முடிவுகட்டிவிட்டால்மட்டும் நம் ஆராய்ச்சி முடிவடைந்துவிடாது. இதுதான் நாம் எதிர்காலத்தில் செய்யப்போகிற மகத்தான ஆராய்ச்சியின் ஆரம்பம் என்று கருதவேண்டும்."

என்றும் அவ்வரவேற்புரையில் பண்ணுராய்ச்சியின் பின்னர் ஓதுவார்களும் தமிழிசை யாதரவாளர்களும் செய்து வரவேண்டிய பணியைக் கூறினுர். எங்கும் தேவாரம், திருப்புகழ், திருவாய்மொழிப் பாடல்கள் தமிழிசைவாணர்களும் ஓதுவார்களும் பாடும் நாளை எதிர்பார்த்து ஏங்கிய தமிழ்ப் பெருமகனுர் சண்முகனுரின் கருத்து நிறைவேறும்படி செய்வது தமிழ்நாட்டின் கடமை. மூன்ருண்டினும் சில பண்களே ஆராயப் பெற்றன. அக்காலத்திய பண் இக்காலத்திய இராகத்திலே எதற்குப் பொருத்தமாக இருக்கிறதென்று கண்டு பிடிக்கும் இப்பணி, தேவாரத்தை இசையரங்குகளிலே எல்லோரும் பாடும் வாய்ப்பை நல்குவதற்காகவே தொடங்கப்பெற்றது. மற்றும், தேவாரப் பண்களை அவற்றின் மரபு வழுவாமல் ஓதவேண்டும் என்பதும் நோக்கமாக இருந்தது.

நாடகத் தமிழ்

ஒல்காப் பெருமை தங்கிய தொல்காப்பியத்திற்கு முன்னரே முத்தமிழும் வளமுற்று இலக்கண அமைப்

பும் பெற்றிருந்தன என்று பழைய நூல்களின் வாயிலாக அறிகிறோம். அத்தகைய முத்தமிழிலே நாடகமும் ஒன்று. நாடகத்திற்கு முதலில் வழங்கிய பெயர் கூத்து. பிற்காலத்தே நாடகம் வேறு, கூத்து வேறு என்னும் இலக்கணமும் பெற்றன. கதை தழுவி வரும் கூத்தை நாடகம் என்றனர்; கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபம் புரிவது கூத்து என்றனர். இதனை இப்போது நாட்டியம் என்கிறோம்.

நாடகத் தமிழை நவின்ற நூல்கள் பல முன்னிருந்தன. இந்திர காளியம், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பஞ்ச பாரதீயம், பரத சேனாபதீயம், பரதம், மதிவாணன் நாடகத் தமிழ் நூல், குணநூல் முதலான நூல்களின் பெயர்கள் கிடைக்கின்றன. இவற்றுள் ஒன்றேனும் இப்போது இருத்தல் ஆகாதா ?

சிலப்பதிகாரத்திலே நாடகத்திற்கும் இசைக்கும் உரிய பல இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இந்நூல் ஒன்றே இசைக்கும் நாடகத்திற்கும் சான்றாக இருக்கின்றது.

கூத்து என்னும் பெயர் இப்போதும் வழங்குகிறது; தெருக்கூத்தெனக் கூறித் தெருவிலே திறந்த வெளியில் சிறிய அரங்கொன்றை—நடிப்பதற்கன்று—பின்பாட்டுப் பாடுவோரும் மத்தளம் அடிப்போரும் இருப்பதற்கென வைத்துக்கொண்டு ஆடுகிறார்கள். கொச்சைத் தமிழிற் கல்வியறிவில்லா மக்களால் நடைபெறுகிற இக் கூத்து நம் தமிழ்ப் பெயரை மட்டும் தாங்கியுள்ளது.

நாடகம் மேல் நாட்டு முறையிலே சிறிது சிறிதாக வளர்ந்து, நாடக அரங்குகள் கட்டடங்களிலே கட்டணம் கட்டிப் பார்க்கும் அளவிற்கு வந்து, கற்றோரும் பங்

கெடுத்து நடிக்கும் பொழுதுபோக்குக் காட்சியாகியது. மேலும் அந்த நாடகச் செல்வி தவழ்ந்து விளையாடும் பருவத்திலிருந்து பேசும் படமாகிய பருவ மங்கையாகி விட்டாள். பொதுமக்களுக்கும் நாடகம் என்பது என்ன என்று அறியும் அறிவு உண்டாகியிருக்கிறது.

சில்லாண்டுகட்கு முந்தி நாடக மேடையை இசை மேடையாக மாற்றிக்கொண்டிருந்தனர். புராண நாடகமான அரிச்சந்திர நாடகத்தில், இறந்த குழந்தையைக் கையிலேந்தித் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சந்திரமதி துக்கப்பாட்டுப் பாடிக்கொண்டிருக்கும்போது அதை நிறுத்திவிட்டுத் தேசியப்பாட்டைப் பாடவேண்டியிருக்கும். மற்றும் ஒரே பாட்டை நாடகம் பார்க்கும் மக்கள் விரும்பும்போதெல்லாம் நடிகர்கள் நாடகத் தொடர்பில்லாமலே பாடவேண்டும். இப்போது, அந் நிலை மாறியது பாராட்டத்தக்கதே.

இயலுக்கும் இசைக்கும் பணிபுரிந்த நம் சண்முகனார் நாடகத்திற்கும் பணிபுரிந்துளார்; தமிழ் நாட்டிலே நீண்ட காலமாக மறைந்துகிடந்த கலைச் செல்வமாகிய குறவஞ்சி நாடகத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தனர். பரதநாட்டியக் கலையும் பிறநாட்டியக் கலையும் வளர்ந்துவரும் இக்காலத்தே இதனை உயிர்ப்பிக்க முன் வந்தது மிகவும் நல்லதாயிற்று.

குறவஞ்சி நாடகத்தின் சான்றாக இப்போது விளங்குவது சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பர்.

இந் நாடகம் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்னர்க் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. மராட்டிர மன்னனான சரபோஜி தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்

குச் செய்தான். அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந் நூல் இயற்றப்பட்டது. இது தஞ்சைப் பெரிய கோயிலில் அரசியல் காரணமாகப் பல்லாண்டு மறைந்துகிடந்தது. இதற்குத் திரும்பவும் உயிர் நல்கி எங்கும் எக்காலத்தும் பார்த்துக் கேட்டு மகிழத் தமிழ் நாட்டுக்குத் தந்த பெருமை நம் சண்முகனார்க்கு உரியது. தமிழிசைச் சங்கத்தின் ஆதரவிலே 1945-ஆம் ஆண்டி னும் 1951-ஆம் ஆண்டினும் இருமுறை நம் சண்முகனார் அதனை நடத்துவித்தனர். மற்றும், வானொலி வாயி லாகவும் அதனை வெளியிடச் செய்தனர்.

இங்ஙனம் தமிழ்ப் பணியை முத்தமிழ் வளம்பெறச் செய்த நம் சண்முகனாரைப் போலவே பொருளும் செல் வாக்கும் பெற்றோர் சிறு சிறு பணிபுரிய முன்வரினும் பலதுளி பெருவெள்ளமாகித் தமிழன்னை நலம் பெறற் கேதுவாகும்.

அண்ணாமலை மன்றம்

ஒன்பது ஆண்டுகள் தமிழிசை விழா வாடகைக் கட்டடங்களிலே நடந்து வந்தது. தமிழிசைச் சங்கத் திற்கென ஒரு தனிக்கட்டடம் வேண்டும் என்ற நினைவு நம் சண்முகனார்க்கு வளர்ந்து வந்தது. அதன் பயனாக இப்போது சென்னை உயர்தர நீதிமன்றத்திற்கருகே உள்ள வெளியில் அழகிய தோற்றமும் நலமும் பொருந் திய கட்டடம் எழுந்தது. அக்கட்டடத்திற்கு 'அண்ணா மலை மன்றம்' எனப் பெயர் சூட்டினர். தமிழிசைச் சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழா 1953-ஆம் ஆண்டு ஏப்பிரல் 15 முதல் 19 வரை நடைபெற்றது. முதல் நாள் விழாவும் மற்றை நாட்கள் தமிழிசையரங்குகளும் நடைபெறுவது வழக்கம். முதல் நாள் விழாவின் இறுதி

யிலே நம் சண்முகனார் நன்றி கூறும் நிகழ்ச்சியிருந்தது. எனினும், அவர்தம் நண்பர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்களே கூறும்படி நேர்ந்தது. சண்முகனார் நோய்வாய்ப்பட்டிருந்தனர் என்றனர். அதனாலே போலும் பண்ணாராய்ச்சிக் கூட்டமும் நடைபெறவில்லை; தமிழிசை விழாவும் பொலிவிழந்திருந்தது.

---

௯. தொழில்துறைத் தொண்டு

நம் சண்முகனார்க்கு நாட்டிலே தொழில் பெருக வேண்டும் என்பதிலே பேரார்வம் உணடு. 'உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை' செய்யாமற் காலம் போக்கியதனாலே வறுமையிற் சிக்கிய நம் நாட்டைத் தொழில் வளமுடையதாக்க வேண்டுவது அத்துறையிலே வல்லவர்களின் கடமையாகும். இந் நோக்கத்துடன் நம் சண்முகனார், தாம் பிறந்த கோவையிலே முதன் முதலாகப் பஞ்சாலை நிறுவினார். இப்போது முப்பதுக்கு மேற்பட்ட பஞ்சாலைகள் உள்ளன. இருபத்தைந்தாண்டுகட்குள்ளாக, இங்கிலாந்திலே சிறப்புற்ற தொழில் நகராக விளங்கும் 'மான்செஸ்டர்'போலத் தமிழ் நாட்டிலே கோவை விளங்குகிறது.

ரு. பெரும் பிரிவு

சண்முகனார் உழைப்பும் ஓய்வில்லாதது ; அவர்தம் சிந்தனையும் ஓய்வில்லாதது. அளவு கடந்த இந் நிலையாலே போலும் இரத்தக் கொதிப்பு உண்டாயிற்று ; இதயக் கோளாறும் இருந்தது. இரண்டு திங்கள்வரை துன்புற்றார். வீட்டிலேயே இருக்கும்படி நேர்ந்தது தமிழ் நாடு தவக்குறைவுடையது. தமிழன்னைக்குச் சிறந்த பணி இயற்றி வந்த சண்முகனாரின் சேவையை அது நீண்ட நாள் பெறவில்லை. 5-5-1953 மாலை 6 மணிக்குத் தம் ஓயாவுழைப்பிலிருந்து விலகித் தாம் வழிபடும் சிவ பெருமான் திருவடி நீழலை நம் சண்முகனார் எய்தினர்!

அவர் நோயாக இருக்கும்போதே தமிழிசையும் தமிழ்ப்பண்ணும் தாம் இனி எவ்வாறு வாழ்வோம் என்ற கவலையுடன் சோர்வுற்றனபோல ஆயின. பண்ணாராய்ச்சி நடைபெறவேயில்லை. மூன்றாவது பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில், 'இதுதான் நாம் செய்யப் போகிற மகத்தான ஆராய்ச்சியின் ஆரம்பம் என்றே கருத வேண்டும்' என்றும், 'அயர்ச்சியுறாமல் மேலும் மேலும் தொடர்ந்து ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும்' என்றும் சண்முகனார் கூறிய மொழிகள் பண்ணாராய்ச்சியை அந்த ஆண்டுடன் முடித்துவிடுவதாக அவருக்கு எண்ணம் இல்லை என்பதை அறிவிக்கின்றன.

பொருளும் செல்வாக்கும் உள்ளமும் ஒருங்கே வாய்த்த சண்முகனார் பிரிவு தமிழன்னைக்கு ஈடுசெய்யாத குறையாகும். இம் மூன்றும் ஒருங்கே வாய்த்த தலைவர்களாலேயே ஒரு நாடு முன்னேற்றமடைய முடியும். எனினும், எந்த நாடும் ஒருவருடைய உழைப்பை மட்டும் எதிர்பார்த்தல் எங்ஙனம் நலம் தரும்? சண்முக

னர் ஊனுடலை விட்டாலும் அவர்தம் உள்ளம் தமிழ்ப் பணியிலேயே சுழன்றுகொண்டிருக்கும். தமிழ் மக்களின் உள்ளத்தே அவர்தம் பணி மாறாத கிளர்ச்சியை உண்டுபண்ணிக்கொண்டே யிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதை ஆதரவாகக்கொண்டு தமிழ் மக்கள் முயன்றால் சண்முகனார் விருப்பமாகிய முத்தமிழ்ப் பணியும் நன்றாக நடைபெறும். அவர் நமக்கு வழிகாட்டியாக இருந்ததைப் பயன்படுத்திக் கொள்வோமாக !

சண்முகனார் ஊனுடல் பிரியும்போது, வயது முதிர்ந்த அவர்தம் அன்னையாரும் குடும்பத்தினரும் நண்பர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரும் அருகில் இருந்தனர். கொச்சித் திவானாக இருந்தபோது அணிந்திருந்த சரிகைத் தலைப்பாகை, நீண்ட கறுப்புக் கோட்டு, கறுப்புக் கால்சட்டை ஆகிய இவைகளை அணிவித்துப் பூப் பல்லக்கில் உட்கார்ந்த நிலையிலே வைத்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள நன்காட்டிற்குக் கொண்டு சென்றனர். வணிகர்களும் ஆலைச் சொந்தக்காரர்களும், நண்பர்களும் சூழ்ந்துவர நன்காட்டை யடைந்த ஊனுடல் இறுதிச் சடங்கு பெறுமுன் திருவாசகத்திலிருந்து சில பகுதிகள் படிக்கப்பட்டன. அறிஞர் பலர் சண்முகனாரைப் பாராட்டிப் பேசினர்.

ராஜா. சர். முத்தையா செட்டியாரும், பி. டி. இராஜனும் வந்து தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

நாட்டின் வருத்தம்

அவர் பிரிவினாலே நாடடைந்த துயரம் மிகுதி. டில்லி சட்டசபையும் சென்னை சட்டசபையும் தம் வருத்தத்தை அறிவித்தன. ஒரு நிமிஷம் அமைதியாக எழுந்து நின்று மரியாதை காட்டின.

நம் முதலமைச்சர் இராஜாஜி அவர்கள், "ஸ்ரீ செட்டியாரின் மரணத்தால் தலைசிறந்த தேச ஊழியரை இழந்துவிட்டோம். எனது வருத்தத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஸ்ரீ செட்டியார் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆனால், அவர் குணமடைவார் என்றே நம்பினேன். எனது சொந்த நஷ்டமாகவே கருதுகிறேன். யோசனையும் உதவியும் எனக்கு மிகவும் ஆதரவாக இருந்தன. முக்கியமாகத் தமிழ் மக்கள் கலாசாரத் துறையிலும் அரசியலிலும் நிபுணராக உள்ள ஒருவரை இழந்ததன்மூலம் பெருநஷ்டம் அடைந்துவிட்டனர்," என்று தம் வருத்தத்தை அறிவித்தார்.

முன்னாளமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்கள், "ஸ்ரீ சண்முகம் செட்டியாரின் மரணம் கேட்டுத் திடுக்கிட்டேன். பல விஷயங்களில் பாண்டித்தியம் உள்ள ஒருவரை இழந்தது இந்நாட்டிற்கு—முக்கியமாகத் தமிழ் நாட்டிற்குப்—பெருநஷ்டமாகும். காலஞ் சென்றவர் அரசியல்வாதி மட்டுமல்ல. கலாரசிகருமாவார்," என்றனர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சண்முகனாருக்குப்பின்னர்த் துணைவேந்தராக அமர்ந்த சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள், "ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் சிறந்த ராஜ தந்திரி; செல்வ, பொருளாதார விஷயங்களில் நிபுணர். தமிழ்க் கலாசாரத்துக்காக அரும்பாடு பட்டவர். தென்னிந்தியப் பிரமுகர் ஒருவரை நாம் இழந்துவிட்டோம்," என்று கூறினார்.

மற்றும் பல அறிஞர்களும் தம் வருத்தத்தை அறிவித்தனர்.

உயர்திரு டாக்டர் அழகப்பசெட்டியார் ஒன்றரை இலட்ச ரூபா செலவில் நம் சண்முகனர் பெயரால் ஒரு நூல் நிலையத்தைக் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் அமைத்துத் தம் நன்றியை அறிவித்துள்ளனர்.

எல்லாப் பத்திரிகைகளும் செய்தித்தாள்களும் தம் வருத்தத்தை அறிவித்தன.

கூ. சிறப்பியல்புகள்

நாட்டுப்பற்று

இனி, நாம், நம் சண்முகனரின் சிறப்பியல்புகளை ஆராய்வோம். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வேண்டுவது நாட்டுப்பற்று. இன்றியமையாப் பிற இயல்புகளினும் தலைசிறந்தது இது. ஒவ்வொருவருடைய கடமையும் தம் நாடு பிறநாடுகளினும் மேம்படவோ, மேம்பட இயலாவிடினும் சமமாக இருக்கவோ பணி புரிவதாகும்.

சண்முகனர்க்குத் தமிழ் நாடு முன்னேறவேண்டும் என்பதிலே அளவிலாத ஆர்வம் உண்டு. எனவேதான் தமிழ்ப்பணியிலே முனைந்தார். அம்முயற்சியின் பயனாக முத்தமிழும் அடைந்தபயனை முன்னர்ப்படித்தோம்.

தாம் உரையிட்டுப் பதிப்பித்த சிலம்புச் செல்வத்தின் முகவுரையிலே சோழநாட்டின் தலைநகராகிய புகார் கடல்கொண்டதை எண்ணி வருந்தி எழுதியுள்ளார். மேலும், மறைந்த அந் நகரத்தைப் புதைபொருளாராய்ச்சித் துறையினர் அகழ்ந்து பார்த்துப் பல உண்மைகளைக் காணவேண்டும் என்ற ஆவலுடையவராகவும் இருந்தார்.

சிலப்பதிகாரத்திலே நிறுவப்பெற்றிருக்கும் காவிரிப் பூம்பட்டினத்தைக் கண்ணூரக் காணவியலாவிட்டாலும், அங்குவாழும் தமிழன்பர்களைக் கொண்டு சிலப்பதிகார மாநாடு ஒன்றைக் கூட்டித் தலைவராக அமர்ந்து, புகாரைக் கற்பனையாலேனும் எல்லோரும் காணச் செய்தார். அப்போது கரிகாலன் ஆண்ட பட்டினப் பாக்கமும் மருவூர்ப் பாக்கமும் அடங்கிய புகாரும், கரிகாலன் பேரவைச் சிறப்பும், அங்கே கண்ணகி இல்லறம் நிகழ்த்திய மனையும், மாதவி ஆடிய நாடக அரங்கும், அவள் கானல்வரி பாடிய கவினுறு கடற்கரையும் ஆங்குக் குழுமிய தமிழன்பர்களின் அகக் கண்ணிலே தோன்றி, அத்தகைய தம் தலைநகரை யிழந்ததை எண்ணிக் கண்ணீர்விடச் செய்திருக்கும்.

சொல்வன்மை

நம் சண்முகனாருடைய சொல்வன்மை அரசியல் வானிலே ஆங்கில மொழி வாணியாக நன்கு பரவிப் புகழ் பெற்றதை அறிவோம். ‘கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப’ மொழியும் அவர் தம் ஆங்கிலப்பேச்சு வீறுடையது; வியப்பூட்டுவது. அவருக்கே உரிய வெண்கல ஓசை அவர் பேச்சிலே இன்புறுத்தும்; கருத்தும் கவர்ச்சியும் நிறைந்திருக்கும்; சலசலத்து ஓடும் நீரருவிபோன்று அமைதியாயும் இருக்கும்.

அவர் பேச்சுத் தெளிவானது. “கருவிகளின் இசையைக் கண்டுபிடித்தவன் சொல்லால் இசைத்துப் பாடும் முறையைப் பின்னரே கண்டுபிடித்திருப்பான். அதன் படியே சாகித்தியம் ஏற்படலாயிற்று; கருவிகளையும் சாகித்தியத்தையும் பொருத்திப் பண்ணிசைக்கும் பண் புண்டாயிற்று; கருத்தும் இசையும் சேர, உள்ளத்து

உணர்ச்சியை எளிதாக வெளிப்படுத்துந் திறம் வளர்ந்தது. சாகித்தியத்தையும் நாதத்தையும் பிரிக்கமுடியாத நிலை உயர்ந்தது. அவற்றிலிருந்து ஒன்றைப் பிரித்து விட்டாற் பயனில்லை; இன்பமும் இல்லை.'' என்று பண்ணுராய்ச்சிக் கூட்டத்திலே (24-12-49-இல்) கூறியிருப்பதை நோக்குக.

மற்றும் அவர் பேச்சு அஞ்சாமையைக் காட்டும் என்பதைத் தமிழிசைச்சங்க முதலாண்டு விழாவிலே அரசியல் அதிகாரிகள் பலர் தமிழிசையை எதிர்ப்பதை எடுத்துக் காட்டிப் பொதுமக்கள் அதற்கு அஞ்சக்கூடாது எனக் கூறியதாலும் விழாவிற்கு நன்றி கூறும்போது, 'தமிழிசையை எதிர்ப்பவருக்கே முதலில் நன்றி கூறவேண்டும். ஏனெனில், அவர்களுடைய எதிர்ப்பே தமிழர்க்கு விழிப்பைத் தந்தது' என்று கூறியதாலும் அறிக.

நயம்பட இடித்துரைப்பதிலும் இவர் சிறந்தவர். ''நம்முடைய தமிழிசை இயக்கம் 'அரசியல் சூழ்ச்சி' என்று சிலர் கூறுகின்றனர். நாம் என்ன விளக்கம் கூறினும் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். ராஜாஜி, டி. கே. சி. முதலியோர் கலந்துள்ள நமது மாநாட்டைக் கவனித்த பின்னரும் எதிரிகள் மனம் மாறவில்லை என்றால், அவர்களை நாம் எவ்வாறு திருப்பமுடியும்? எங்கள் இயக்கத்தில் வகுப்புப் பேதமாவது அரசியல் சூழ்ச்சியாவது கொஞ்சங்கூட இருக்கமுடியாது என்பது யோக்கியமான ஒவ்வொருவருக்கும் தெரியவரும்,'' என்று 4-1-44-இல் தமிழிசைச் சங்க விழாவிலே கூறியதை நோக்குக.

விருந்தோம்பல்

கோவைக்கு அடிக்கடி வரும் பெரியோர்கள் எல்லோரும் நம் சண்முகனுர் இல்லத்திலே தங்கி மகிழ்வர்.

இவருடைய இளமைப் பருவத்திலேயே ஜெயகர், சிரத்தானந்தர் முதலியோரை வரவேற்று விருந்தோம்பி யுள்ளனர். அப்போது அறிஞர் மகிழும்படி செவிவிருந்தும் நடைபெறும்.

இரக்கம்

பெரும்பாலும் செல்வர்களிடையே நண்பர்கட்கு விருந்து வைக்கும் வழக்கம் இருக்கிறதேயன்றி, அளவில்லாமல் வாடிக்கிடக்கும் ஏழை மக்களிடம் அவர்களுடைய பொருளும் சொல்லும் சென்று பயன்பெறுவதில்லை. நம் சண்முகனார் இவ்விதிக்கு விலக்கானவர்; வறியரிடம் இரக்கமுடையவர்; இரக்கமுடைமை மட்டும் அன்று, வறியவரிருத்தல் கூடாது என்ற கருத்தும் உடையவர். அதாவது, வறுமையில்லாத நாடாக நம் நாடு விளங்கவேண்டும் என்பது அவருடைய விருப்பம்.

இக்கருத்தை, "நம் நாடு அறிவிலும் நாகரிகத்திலும் முன்னணியில் இருப்பதென்று நாம் பெருமை பாராட்டிக் கொள்கிறோம். இலட்சக் கணக்கான மக்கள் உணவில்லாமற் பட்டினி கிடக்கும் ஒருநாட்டிலே, எவ்வளவு சாஸ்திரங்களும் வேதாந்தங்களும் இருந்தபோதிலும் ஒன்றும் பயனேயில்லை. நாட்டில் பசியால் வருந்தும் ஒருவனாவது இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்தால்தான், நாமும் நாகரிகமக்கள் என்று சொல்லிக் கொள்ள உரிமையுண்டு," என்று ஒருமுறை சண்முகனார் கூறியதால் அறியலாம். இவர் கருத்துடன், "தனிப்பட்ட ஒருவனுக்கும் உணவில்லை என்று கூற நேர்ந்தால், அத்தகைய உலகை அழித்திடுவோம்," என்ற பொருள்படப் பாடிய பாரதியார் கருத்தையும்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்ற தமிழ்மறைக் கருத்தையும், பிறர் வறுமைக்குத் தான் நாணிய 'ஏறை' என்னும் பெயரிய தமிழ்வள்ளல் கருத்தையும் ஒப்பிடுக!

நாகரிகம் மிகுந்த நம் சென்னைமா நகரிலே சிற்றுண்டி நிலையங்களிலும் பேசும் படக்காட்சிச் சாலை முதலான பொழுதுபோக்குக் கூடங்களிலும் தண்ணீரைப்போலப் பொருளைச் செலவழிக்கும் செல்வர் கூட்டங்களையும் தெருக்கள்தோறும் சாக்கடை மேடையே இருப்பிடமாகக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் வயிற்றுக்கின்றி வாடிக்கிடக்கும் வறியர் குழுக்களையும் ஒவ்வொரு நாளும் பார்க்கிறோம். இந்நிலையே எல்லா நகரங்களிலும் சிற்றூர்களிலும் உள்ளது. மேலும், செல்வமும் வறுமையும் எங்கும் கைகோத்து இணைந்து நிற்பதால் இரண்டினுடைய ஏற்றத்தாழ்வையும் ஒப்பிட்டறியவும் இயல்கிறது. அவ்வாறு ஒப்பிட்டறியும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வறியரின் இன்னல் தாக்கி இரக்கம் உண்டாக்கினால் நன்றாயிருக்கும். இந்த நிலை மாற வேண்டுமானால், 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்னும் பழமொழி வழங்கும் நம் நாட்டிலே நம் சண்முகனாரைப்போன்றே எல்லாச் செல்வம் மிக்க அறிஞர்களும் மனமுவந்து உழைத்தல்வேண்டும். அப்போதுதான்,

"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு"

என்ற வள்ளுவர் வாய்மொழியை வாய்குளிர ஓதி மகிழலாம் நாம்.

*நேர்மை

நம் சண்முகனர் எப்போதும் நேர்மையை விரும்புகின்றவர். காந்தியடிகள் தமிழ்நாட்டிலே முதன் முதலாகச் சுற்றுப்பயணம் வந்துகொண்டிருந்தபோது, நம் சண்முகனர் கோவைநகர அவையிலே உறுப்பினராக இருந்தார்; கல்லூரியிற் படிக்கும்போது கண்ட அடிகளைப் பத்தாண்டுகள் கழித்துக் காணும் பேறுபெற்ருர். காந்தியடிகளின் ஒத்துழையாமையைக் கோவை நகராண்மைக் கழகம் ஆதரிக்காத காலம் அது. சில உறுப்பினர் காந்தியடிகட்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்க விரும்பினர்; சிலர் கூடாது என்றனர். ''ஒத்துழையாமையை நாம் ஒப்பாவிடினும் மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், கதர் முதலான சீர்திருத்தங்களை நாம் ஏன் ஒத்துக்கொள்ளலாகாது?'' என்று சில உறுப்பினர் வினவினர்.

நம் சண்முகனர் அவர்களை நோக்கி, ''வரவேற்பிதழில் நாம் வெறும் பாராட்டுக்களைச் சொல்லாமல் நம்முடைய உண்மையான கருத்தை விளக்கமாய்ச் சொல்லலாம். மேலும், நாம் ஒத்துழையாமையைக் கண்டிக்கலாம்,'' என்ருர். மற்றும், ''காந்தியடிகள் உண்மை வாதி. நம் மனத்தில் உள்ளதை ஒளியாமல் எடுத்துச் சொன்னுல் அவர் மகிழ்ச்சி அடைவார்,'' என்றும் இயம்பினுர்.

சண்முகனர் கருத்துப்படியே வரவேற்பிதழ் காந்தியடிகட்குக் கொடுக்கப்பட்டது. வரவேற்பிதழைச் சண்முகனரே எழுதினர்.

''தங்களுடைய ஒத்துழையாமை இயக்கத்திலே எங்கட்குச் சிறிதேனும் நம்பிக்கையில்லை. ஒத்துழைப்

---

* இப்பகுதி சர். ரா. க. சண்முகனர் எழுதிய 'வாழ்க்கைத் துணை நூலி'லிருந்து எடுத்தெழுதப்பெற்றது.

பின் மூலமாகத்தான் நாடு விடுதலை அடையக்கூடும். ஆனால், தாங்கள் எடுத்துக்கொண்ட சீர்திருத்த வேலை களை நாங்கள் முழுமனத்தோடு வரவேற்கிறோம். தீண் டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, கதர் அபிவிருத்தி, கிராம முன்னேற்றம் இவைபோன்ற காரியங்களில் நாங்கள் தங்களுக்கு முழு ஆதரவையும் கொடுக்கத் தயா ராக இருக்கின்றோம்.'' என்று குறிப்பிட்டிருந்தார்.

காந்தியடிகளும் சண்முகனார் கருதியவாறே விடை கூறியிருந்தார்.

"இன்று நான் என் எதிரிகளின் கூட்டத்திலே இருக்கின்றேன் என்று பலர் அபிப்பிராயப் படலாம். ஆனால், கோவை நகராண்மைக் கழகத்தார் என்னுடைய உண்மையான நண்பர்கள் என்று கருதுகிறேன். வர வேற்பிதழில் வழக்கம்போல வெறும் புகழுரைகளைச் சொல்லாமல், அவர்கள் தங்கள் உண்மையான கருத்துக் களை விளக்கியிருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. என்னுடைய ஒத்துழையாமை இயக்கத் தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையானால், அதை முற்றி லும் மறந்துவிடுங்கள். அதற்காக நான் வருந்தப்போவ தில்லை. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் சீர்திருத்த வேலை களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டு என்று காட்டி யிருப்பதே எனக்குப் போதுமானது. அவ் வேலைகளில் ஈடுபடுங்கள்.''

என்பது காந்தியடிகளின் விடை.

* * * *

1926-இல் நடந்த தம்முடைய மற்றொரு சுற்றுப் பயணத்தின்போது காந்தியடிகள் கோவைக்கு வந்திருந் தார். ஒருவாரம் சண்முகனார் இல்லத்திலே தங்கினார்.

அப்போது, ஒருநாள் மாலை அடிகளின் நிழற்படம் ஒன்றை எடுத்துக்கொண்டுபோய், அதனடியிலே அடிகளைக் கையெழுத்திடும்படி நம் சண்முகனார் கேட்டுக் கொண்டார். காந்தியடிகள், 'என்னுடைய கையெழுத்தை இந்த நிழற்படத்தில் இடவேண்டும் என்றால், அதற்குச் சரியான விலையைக்கொடுக்க நீ தயாராக இருக்கிறாயா?' என்று வினவினர்.

சண்முகனார் சிறிதும் தயங்காமல், எவ்வளவு பணம் கேட்டுவிடுவார், பார்க்கலாமே என்ற எண்ணத்துடன், 'விலை கொடுக்கத் தயார். எவ்வளவு தொகை வேண்டும்?' என்றார். 'எனக்கு நீ பணம் ஒன்றும் தரவேண்டாம், நான் கேட்கும் ஒரு வாக்குறுதி கொடுத்தால் அதுவே சரியான விலையாகும்' என்றார் அடிகள்.

சண்முகனார்க்குச் சிறிது தயக்கம் உண்டாயிற்று, என்ன கேட்பாரோ என்று. 'என்னால் என்ன ஆக வேண்டும்?' என்றார்.

அடிகள், 'நாள்தோறும் அரைமணி நேரத்துக்குக் குறையாமல், கைராட்டையால் நூல் நூற்பதாக நீ எனக்கு வாக்குறுதி செய்யவேண்டும்,' என்றனர்.

சண்முகனார் சிறிது சிந்தித்தார். 'இது என்னால் முடியாத காரியம்' என்று கூறினார்.

இவ்விடை அடிகளுக்கு வெறுப்புண்டாக்கவில்லை; மகிழ்ச்சியையே உண்டாக்கியது. 'நீ சொன்ன உண்மையான விடையைப் பாராட்டுகிறேன். எனக்கு வாக்குக் கொடுத்துத் தவறுவதைவிட, உன் முடியாமையை ஒத்துக்கொண்டதே மேல்' என்றார்.

சண்முகனார் அடிகளின் கருத்துக்கு மகிழ்ந்தார். 'நான் ஒளியாமல் உண்மை பேசினதை ஒருவிலையாக

வைத்துக்கொண்டு கையெழுத்துக் கொடுக்கக்கூடாதா?' என்றார்.

அடிகள் நகைத்துக்கொண்டே, "நான் ஒரு 'பனியா !' நீயும் ஒரு 'பனியா !' வணிகத்திலே நீ வெற்றி பெற்றுவிட்டாய்," என்று கூறிக்கொண்டே கையெழுத்திட்டார். (பனியா - வணிகன்).

* * * *

சண்முகனார் டில்லியிலே பொருளமைச்சராக வேலை செய்துகொண்டிருந்தபோது, காந்தியடிகள் வங்காளத்திலிருந்து டில்லிக்குவந்து, பிர்லா மாளிகையிலே தங்கியிருந்தார். சண்முகனார் காணச்சென்றார்.

"வாருங்கள் ஐயா! உட்காருங்கள். க்ஷேமந்தானா ?" என்று தமிழிலே காந்திப் பெரியார் வரவேற்றார்.

இவரும் தமிழிலேயே, "க்ஷேமந்தான் சுவாமி! இன்றுமுதல் என்னிடம் தாங்கள் தமிழிலேயே பேச வேண்டும் என்று கோருகின்றேன்" என்றார். அடிகள் நகைத்தார்.

தென்னாப்பிரிக்காவிலே தமிழ் மக்களிடையே வேலை செய்தபோது, சில தமிழ்ச் சொற்களைமட்டும் கற்றிருந்தார். ஆகவே, மேற்கொண்டு ஆங்கிலத்திலேயே உரையாடல் நிகழ்ந்தது.

அடிகள், "உரிமைபெற்ற இந்தியாவிலே நீ அமைச்சனாக இருக்கிறாய். உன்னுடைய சகாக்களாகிய மற்ற அமைச்சர்களுக்கு நீ தமிழ் கற்றுக்கொடுக்கவேண்டும். அது உன்னால் முடியாமற்போனால் நீ இந்துஸ்தானி கற்றுக்கொள்ளவேண்டும்," என்றார்.

அதற்கு நம் சண்முகனார், "நான் இந்துஸ்தானி கற்றுக்கொள்வது எளிது என்று எனக்குத் தோன்றவில்லை.

தங்களுடன் முப்பது வருடமாக நெருங்கிப் பழகிய ராஜாஜி அவர்களே சரியாக இந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், என்னால் எப்படி முடியும்?'' என்று தயங்காமற் கூறினார்.

உலகப் பெரியாராய்ப் புகழ்பெற்ற காந்தியடிகளுடன் உரையாடும்போதும், 'சரி சரி' என்று தலையாட்டாமல், உள்ளத்தாற் பொய்யாது பேசிய நம் சண்முகனாரின் நேர்மைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

பழமையும் புதுமையும்

இது ஒரு மறுமலர்ச்சிக்குரிய காலம்; 'பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவல கால வகையினானே' என்ற பழங்கொள்கைக்கு இலக்கியம் காணும் காலம். சண்முகனாரும், ''எதற்கெடுத்தாலும் பரம்பரை பரம்பரை என்ற ஒன்றை நாம் கூறிக்கொண்டேயிருக்கின்றோம். பரம்பரையும் பழமையும் ஓரளவு வேண்டியதுதான். ஆனால், பரம்பரையை—சம்பிரதாயத்தைக்—கைவிடலாகாது என்கிற ஒரு காரணத்திற்காகப் புதிய வளர்ச்சிகளை நாம் தடுக்கக்கூடாது. அடிப்படையிலே கெடுதல் இல்லாது, பழமையை அஸ்திவாரமாகக் கொண்டு புதுமையைக் கட்டவேண்டும்; அதை வளர்க்க வேண்டும்'' என்று கூறுவதால், மறுமலர்ச்சிக் கொள்கையை ஆதரிப்பவரென்றே கொள்ளவேண்டும்.

சமூகப்பணி

சமூகத் தொண்டே இறைவழிபாடாகும் என்பது சண்முகனார் கருத்து.

''இறைவன் அருளைப் பெற்று, அறநெறியை அறிந்த ஒவ்வொருவனும் உலக மக்களுக்குத் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். தன்னுடைய ஆன்மலாபத்தை

மட்டும் கருதி, உலகத்தை வெறுத்துத் தனியே இருப்பது மேம்பட்ட வாழ்க்கையன்று. மக்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனை வழிபடும் சிறந்த மார்க்கம்.''

எனக் கூறியிருப்பதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். எங்கும் இறைவர் கோயிலானால், ஏழைகளின் உள்ளமும் இறைவர் கோயிலேயாம். ஆகவே, ஏழைகளை 'நடமாடுங் கோயில்' எனல் வீணுரையன்று. அத்தகைய எளியோர்க்குத் தொண்டு செய்யாமல், ஏழைகளின் உள்ளத்தே இறைவர் இருக்கிறார் என்பதை ஆராய்ந்து கொள்ளாமல், தன் உள்ளத்திலே மட்டும் இறைவர் இருப்பதாகக் கருதி, அவரைத் தேடத் தனியே அமர்ந்து, 'சும்மா இருப்பதுமட்டும்' எத்துணைப் பொருத்தமாகும்? அங்ஙனம் தேடிக் கண்டாலும், இறைவர் இப் பெரியாருக்கு என்ன கூறுவார்? ''அளவற்ற ஏழைகள் அங்கே உள்ளனர். அவர்களைப் பார்! அவர்கள் முன்னேற்றத்திற்கு உழை'' என்றுதானே கூறுவார்? ஆகையால் சிறந்த முறையிலே இறைவழிபாடு செய்வதென்பது சமூகத் தொண்டேயாம்.

'எண்ணித் துணிக கருமம்'

'சிக்கிரம் முடிவு காணவேண்டும் என்பதைவிட, நல்ல முடிவு காணவேண்டும் என்பதே நோக்கமாக இருத்தல் வேண்டும்' என்று சண்முகனார் கூறுவதால், எதனையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்பது அவர்தம் விருப்பமாகும்.

கொள்கை

கொள்கை என்பது சமுதாயத்தின் முன்னேற்றத்தைக் கருதி ஏற்படுவது ஆகையால், அக் கொள்கை

காலநிலையாலே கடைப்பிடிக்க முடியாமற் போக நேரின், வேறு கொள்கையை மக்கள் கடைப்பிடிக்கலாம். மக்களுக்காகவே கொள்கை ஏற்படுகிறதேயன்றிக் கொள்கைக்காக மக்கள் ஏற்படவில்லை. மற்றும், நாட்டுப் பணியாற்றுவோர், அப் பணியில் இறங்கும் எக்கட்சிகளையும் ஆதரித்தலும் அதனுடன் சேர்தலும் வழுவாகா. பிணிக்கு மருந்தளிப்போன், அம் மருந்து பயன் தராதாயின் வேறு மருந்து காண்பது தவறாகாது. அக் கட்சிகளால் தந்நலம் பெறுவோர் தந்நலங்கருதியே மாறுவராயின் அம்மாறுதலே இழுக்குத் தருவது.

சண்முகனார் முதலில் நீதிக் கட்சியிலே பணியாற்றினார். பிறகு, சுயராச்சியக் கட்சியிலும் பணியாற்றினார். எனினும், இவர்தம் உள்ளம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றம் கருதி உழைத்தலிலேயே ஈடுபட்டிருந்தது. மற்றும், இவர் ஒருவரைப் பின்பற்றி நடப்பவரல்லர்; தமக்குத் தகுதியெனப்பட்ட துறையிலே அஞ்சாது செல்வார். சுயராச்சியக் கட்சியில் இருக்கும் போதும் ஒருமுறை இவர், 'நான் ஒரு வகுப்புவாதிதான் என்று வெட்கமின்றி ஒப்புக்கொள்கிறேன்' என்றுரைத்தாராம். இவ்வுரையிலிருந்து இவர் தன்மை எப்போதும் மாறுபடாத திண்மை யுடையதென்று நன்கு விளங்கும்.

தெய்வ வழிபாடு

சண்முகனாரின் மரபு தெய்வ வழிபாட்டிலே சிறப்புற்றது. இவர்தம் பாட்டனார் இராமசாமிச் செட்டியாரவர்கள், கோவை தாலூக்கா 'தேவஸ்தானம் கமிட்டி' யிலே உறுப்பினர். அந்நாளிலே திருப்பேரூர் காஞ்சியாற்றில், 'சோழன் துறை' என்னும் படித்துறைத் திருப்

பணிசெய்தவர். மற்றும், திருப்பேரூர் திருக்கோயிலிலே பல திருப்பணிகள் செய்தவர். திருவிழாவைச் சேவிக்க வரும் அடியார்க்குப் பயன்பட ஒரு மடமும் கட்டியிருக்கிருர். இவர்தம் அன்னையார் சீரங்கம்மாள் என்பவரும் திருப்பேரூரிலே பல திருப்பணிகள் செய்தவர்; இறையன்பு மிக்கவர்; சிவனடியார்தம் திருப்புகழையும் சிவபெருமான் திருப்புகழையும் கேட்டு மகிழும் இயல்பினர்; திருப்பேரூரிலே ஆவணிமூலப் பிட்டுத் திருவிழாச் சிறப்பினைக் கொண்டாடியவர்.

எனவே, இவர்தம் முன்னோர்கள் சிவனார் திருவடியன்பு மிக்கவர்கள் எனத் தெரிகிறது.

இவரும் தம் முன்னோர்போலவே, சிவனாரிடமும் சிவனாரை வழிபடும் நூல்களாகிய திருமுறைகளிடமும் ஈடுபாடுடையவர். இவர் செய்துவந்த பணிகள் இந்நிலையை அறிவிக்கின்றன.

சென்ற உலகப் பெரும்போரின்போது, நம் சண்முகனாரைப் போர்க் கருவிகள் வாங்கும்பொருட்டு, நம் அரசாங்கம் அமெரிக்காவிற்குச் சென்றுவரப் பணித்தது. அக்காலம் வெளியிற் புறப்பட எவரும் அஞ்சிய காலம். வானிலே செல்லும் ஊர்திகள் சென்ற இடம் தெரியாமல் மறைந்தன. கடலிற் செல்லும் கலங்கள் திடீரெனக் கவிழ்ந்தன. எனவே, இடையூறுகள் மிக்க வான்வழியே அமெரிக்காவிற்குப் புறப்பட நேர்ந்தது கண்டு நம் சண்முகனாரின் உற்றாரும் உறவினரும் அஞ்சியதில் வியப்பில்லை. எனினும், இவர்மட்டும் அஞ்சாமல் திருப்பேரூர் இறைவரையும் நாயன்மார்களையும் வணங்கி வழிபட்டுச் சென்றார். இவருடன் திருவாசகமும் தேவாரமும் துணையாய்ச் சென்றன.

சண்முகனார் கொச்சித் திவானாக அமர்ந்திருந்த காலத்தே, செய்த சமயத் தொண்டும் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். இவர் ஆட்சி ஏற்றுக்கொள்வதற்கு முந்தின ஆண்டிலே, சிவக் கவிமணி சி. கே. சுப்பிர மணிய முதலியாரவர்களை உள்ளிட்ட பல பெரியோர்கள் கொச்சிச் சீமையில் உள்ள திருவஞ்சைக் களத்திலே, ஆடிச் சுவாதியிலே சுந்தரரும் சேரமான் பெருமாளும் வீடு பெற்ற திருவிழாவைத் தொடங்கியிருந்தனர். கொச்சி மக்கள் அத்திருநாளை மறந்திருந்தனர். மொழி வேறுபாட்டாலும் வேறு சில இடையூறுகளாலும் தமிழ் நாட்டவரும் அவ்விழாவைக் கொண்டாட இயலாதிருந்த னர். எனவே, இவர்கள் மிக முயன்று அவ்விழாவை நடத்தவேண்டியிருந்தது. அடுத்த ஆண்டில் அவ்விழா நடைபெற முடியாதவாறு கொச்சி யரசாங்கத்தாலே பெருந் தடைகள் நேர்ந்தன. அந்நிலையிலேதான் சண்முக னார் கொச்சித் திவானனார்; ஆடிச் சுவாதி விழாவின் தடையையும் உணர்ந்தார். உடனே, அத்தடைகளை நீக்கியதோடு, கோயில் சார்பிலேயே ஆண்டுதோறும் அத்திருநாள் நடைபெறத் திட்டமிட்டுப் பதிவுசெய்தும் வைத்தார். அன்றுமுதல் அத்திருநாள் சிறப்பாக நடை பெறுகிறது; தமிழ் நாட்டவரும் ஆண்டுதோறும் திரளா கச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

பண்ணாராய்ச்சி செய்ய எடுத்துக்கொண்ட முயற்சி யையும் அறிவோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராக இருந்தபோது, அக்கழகச் சார்பிலே சைவத் திருமுறைகள் பன்னிரண்டையும் வெளியிடத் திட்டமிட்டிருந்தார்.

நட்புச் சிறப்பு

அன்பாலும் ஆதரவாலும் அறிவுரைகளாலும் நண்பர்களின் உள்ளத்திலே இடம்பெற்றிருப்பவர் சண்முகனார். நண்பர்களுக்குச் சண்முகனாரைப் பிரிந்திருக்க மனம் ஒவ்வாது. 'நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்' அன்றோ?

இதுவரை கூறியவற்றால் நம் சண்முகனார் மக்களுக்கிருக்கவேண்டிய நற்பண்புகளெல்லாம் உடையவரென அறியலாம்.

எ. அறிவுரைகள்

டாக்டர் சர். சண்முகனார் ஆங்காங்கே கூறிய உரைகள் பல பொன்போன்றவை; மக்களுள்ளங்களிலே மாண்புறப் பொறிக்கத் தக்கவை. அவற்றிற் சில தக்க இடங்களிலே வந்துள்ளன. மற்றும் சிலவற்றை இங்கே காணலாம்:

இறைவன் அருளைப்பெற்ற அறநெறியை அறிந்த ஒவ்வொருவனும் உலக மக்களுக்குத் தொண்டுசெய்யக் கடமைப் பட்டிருக்கின்றான். தன்னுடைய ஆன்ம லாபத்தைமட்டும் கருதி, உலகத்தை வெறுத்துத் தனியே இருப்பது மேம்பட்ட வாழ்க்கை அன்று. மக்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனை வழிபடும் சிறந்த மார்க்கம்.

* * * *

ஒரு மொழியின் பண்டைய இலக்கியங்கள் அம்மொழிக்கு உயிர். தமிழ் இலக்கியங்களை நாம் மறந்தால், உயிரை மறந்ததற்குச் சமானம் ஆகும்.

* * * *

தன் தாய்பாஷையின்மேல் ஒருவனுக்கு உண்மை யான அபிமானம் இருந்தால், இன்னொருவன் தன்னு டைய தாய்பாஷையின்மேல் அபிமானத்தைக் காட்டும் போது, அவன் மற்றவனைப் புகழ்வானே ஒழிய எதிர்க்க மாட்டான்.

*　　*　　*　　*

முதலில் அறிவு மூலம் தேசிய மனப்பான்மை ஏற் பட்டது. பின்னால் உணர்ச்சியின் மூலம் தேசிய மனப் பான்மை தீவிரமாய்த் தோன்றி வளர்ந்தது. அதுவே, சீக்கிரம் நம் நாடு சுதந்திரம் அடைந்ததற்குக் காரண மாகும். தாய்மொழி மூலம் விஷயங்களை எடுத்துச் சொல்வதுதான் உணர்ச்சிக்குக் காரணம்.

*　　*　　*　　*

உள்ள நெகிழ்ச்சியையும், பக்தி உணர்ச்சியையும் எடுத்துக் காட்டும்படியாகத்தான் உலகத்திலே இசை பிறந்தது. சிறப்பாகத் தேவாரப் பண் பக்தி உணர்ச்சி ததும்பும் அரிய களஞ்சியம். எனவே அதைப் பாடு பவரும், கேட்பவர்களும் அதே உணர்ச்சியில் மூழ்க வேண்டியது அவசியம். அப்படி உணர்ச்சி வயப்பட வேண்டுமென்றால் பண்களைமட்டும் ஆராய்ந்தாற் போதாது; பாடல்களிற் பொதிந்துகிடக்கும் அரிய கருத்துக்களையும் உணரவேண்டும். பொருள் தெரியா மல் இசை பாடுவதிற் பயனே கிடையாது.

*　　*　　*　　*

உலகத்திற் சண்டைக்குக் காரணம் வறுமை. உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்படவேண்டு மென்றால், உலகமக்களின் வறுமையைப் போக்கும் வழி களைத் தேடவேண்டும் என்று எல்லோருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

* * * *

நம்முடைய தாய்மொழியில் சாதாரணமாகப் பேசும் சக்தியைக்கூட இழந்து விட்டோமல்லவா? நாம் பேசும் போது நூற்றுக்கு அறுபது வார்த்தைக்குமேல் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறோமே, அதுவும் எவ்வளவு ஆபாசமாக உபயோகிக்கிறோம்! எளிய தமிழ் வார்த்தைகளைக்கூட ஆங்கிலப்படுத்தி விடுகிறோம், 'நாளைய தினம் சந்திக்கலாம்' என்பதற்கு 'நாளைய தினம் மீட் பண்ணலாம்' என்றல்லவா சொல்லுகிறோம்? இந்தவழக்கம் இப்படியே போய்க்கொண்டிருந்தால் தமிழ் மொழிக்குப் பதிலாக ஒரு மணிப்பிரவாள நடையல்லவா தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிடும்? இதை மாற்ற நாம் முயற்சி செய்ய வேண்டாமா?

* * * *

மகாநாடுகளாலும், தர்க்கங்களாலும், தீர்மானங்களாலும் உலகத்தை மாற்றிவிட முடியுமா? மக்களின் மனப்பான்மை அல்லவா மாறவேண்டும்? அதிலும் செல்வாக்குடைய பெரிய தேசங்களை ஆளும் மேதாவிகளின் மனப்பான்மை தூய்மை அடையவேண்டாமா?

* * * *

இல் வாழ்க்கையிலிருந்தே தவம் புரியலாம் என்கிறார் வள்ளுவர். "காட்டில் தவம்புரிகின்றவர் தம்முடைய நன்மையைமட்டும் நாடுபவர்; பிறர் நலமும் தன்னலமும் சேர்ந்து கருதிய இல்வாழ்க்கை எல்லாத் தவத்திலும் சிறந்த தவம்" என்கிறார்.

* * * *

பொருளின்மேல் ஆசைவைக்கக்கூடாது என்பதும் பொருளாசை ஒருவன் நல்ல கதியை அடைவதற்கு

இடையூறுன தென்பதும் பல சமயங்களின் கொள்கை. திருவள்ளுவர் இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்வ தில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் பொருளை விலக்கிவிட்டால் உலகம் நடைபெறுவது முடியாது. உலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது, அருள் வளர்வதற்குங் கூடப் பொருள் வேண்டும். அன்புபெற்ற அருள் என்னும் குழந்தையைப் பொருள் என்னும் செவிலித்தாய் வளர்த்தால் வளரும் என்கிறுர்.

* * ᴦ *

காலப்போக்கில் அரசியல்துறை எத்தனையோ மாறு தல் அடைந்திருக்கின்றது. முடிவேந்தர் ஆண்ட காலத் தில் எழுதப்பட்ட குறள் குடியரசு தலையோங்கி நிற்கும் இக் காலத்திற்கும் பொருந்தியிருப்பது அந்நூலின் அழி யாத உண்மைக்குச் சான்ருகும். அரசியலில் அரச னுடைய மாளிகையைப் பற்றியோ, அவன் ஆடையாபர ணங்களைப் பற்றியோ அவர் சொல்லவில்லை. மன்ன னுக்கு இருக்கவேண்டிய குணங்களையே எடுத்துக் காட்டுகின்ருர். அவைகள் குடியரசில் ஆட்சித்தலைவனு யிருக்கிறவனுக்கும் பொருத்தமாயிருக்கின்றன. அரசன் முறையிட்டுக் கொள்ள வந்தவர்க்குக் காணுதற்கு எளியவனுக்கி, யாவரிடத்தும் கடுஞ்சொல் சொல்லாதவ னுமாகி யிருந்தால் அவனுடைய நாட்டை உலகம் உயர்த்திச் சொல்லும், இது அரசனுக்கு மட்டுமின்றிக் குடியரசு ஆட்சித் தலைவனுக்கும் பொருத்தமானது தானே?

* * * *

தனி யொருவனுக்கு உணவில்லையென்னும் வாக்கே இல்லாமல் இருக்கும்படி செய்யும் விதிதான் எல்லாப்

பொருளாதாரத் திட்டங்களிலும் அடிப்படையான கருத்து.

* * * *

இந்தியாவில் ஆள் ஒன்றுக்கு வருஷத்திற்கு 30 கெஜம் துணியாவது கட்டாயம் வேண்டும். இந்தக் கணக்கின்படி நம் நாட்டில் வருஷம் ஒன்றுக்கு 1200 கோடி கெஜம் நூல் துணியை நாம் உற்பத்தி செய்ய வேண்டும்.

ந * * *

குறைந்தபட்சம் வருடம் ஒன்றுக்கு நம் நாட்டில் 6500 கோடி ரூபாய் வருமானம் உண்டாகும்படி செய்தால்தான் நம் நாட்டுமக்களும் நாகரிகமாக வாழமுடியும்.

* * * *

போதுமான சுகாதார வசதிகள் இல்லாமையால், நம் நாட்டு மக்களின் ஆயுளே குறைந்து விடுகிறது. நம்முடைய நாட்டில் 27 வயதுதான் சராசரியென்று தெரிய வருகிறது. தாய்மார்களுக்குப் போதுமான உணவும் சுகாதார வசதியும் இல்லாமலும், குழந்தைகளுக்குப் போதுமான பால் இல்லாமலும் நம்முடைய நாட்டிற் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வோர் ஆயிரத்திலும் 167 குழந்தைகள் ஒரு வயதாவதற்குமுன் இறந்துவிடுகின்றன.

* * * *

நம் நாட்டில் நீர்வளத்திற்குக் குறைவில்லை. எல்லாக் காலத்திலும் தண்ணீர் நிறைந்து ஓடும் பெரிய பெரிய ஆறுகள் ஏராளமாய் இருக்கின்றன. இந்த ஆறுகளின் வெள்ளமெல்லாம் சமுத்திரத்திற்குப்போய், யாதொரு பயனும் இல்லாமல் விழுகின்றன. ஆறுகளில் அணை

களைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வாய்க்காலின் வழியாக நிலங்களுக்குக் கொண்டுபோக வேண்டும்.

* * * *

தற்கால இயந்திரக் கைத்தொழில்களுக்கு முக்கியமாக வேண்டிய மூலப் பொருள்கள் இரும்பும் நிலக்கரியும். 300 கோடி டன் எடையுள்ள இரும்பும், 6000 கோடி டன் எடையுள்ள நிலக்கரியும் இந்தியாவில் இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். ஆனால், இவைகள் நிலத்தின் கீழே புதைந்துகிடக்கின்றன. இவற்றை வெளியே எடுக்கவும் வேண்டும்; எடுத்து நம் நாட்டில் உபயோகிக்கவும் வேண்டும்.

இயந்திரங்களை நம் நாட்டிலேயே செய்தால்தான் கைத்தொழில் முன்னேற்றம் அடையும். இவைகளைச் செய்வதற்கு முக்கியமாய் வேண்டிய இரும்பும் நிலக்கரியும் நம் நாட்டில் ஏராளமாய் இருக்கின்றன. மின்சாரச் சக்தியினால்தான் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் ஓடுகின்றன. மலைகளிலிருந்து விழும் தண்ணீரின் வேகத்தால், மின்சாரச் சத்தியை எளிதில் உண்டாக்கலாம். உயர்ந்த மலைகளும் பெரிய ஆறுகளும் நிறைந்த நம் நாட்டில் இதற்கு வேண்டிய வசதிகள் ஏராளமாயிருக்கின்றன.

நம் நாட்டில் மூன்று கோடி 'கில்லோவாட்' அளவுள்ள மின்சாரச் சக்தியை உண்டாக்குவதற்கு வசதிகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இதுவரையில் ஐந்து லட்சம் 'கில்லோவாட்' அளவுள்ள மின்சாரச் சக்தியைத்தான் நாம் உண்டாக்கியிருக்கிறோம்.

* * * *

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. இதனால் தனிப்பட்ட மக்களுக்கு என்ன பலன் கிடைத்தது? தனிப்

பட்ட வாழ்க்கை சிறப்படைந்ததா? ஆந்திரர்கள், மார்வாடிகள், குஜராத்திகள், தமிழர்கள்—யாராயிருந்தாலும் அவரவர்கள் கலை, பாஷை, கலாசாரம் முதலியவற்றை அபிவிருத்தி செய்துகொள்ள மார்க்கம், சுதந்திரம் உண்டா? இவை இல்லையென்றால் சுதந்திரம் அடைந்து தான் பயன் என்ன? ஒன்றுமே இல்லை.

*   *   *   *

தமிழ்மொழிப் பற்றுடையவர்கள் தமிழர்கள். உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தோமாயின், தாய்மொழியைப் பாராட்டிப் போற்றிவந்ததில் தமிழர்கள் முன்னணியில் இருந்துவந்திருப்பது புலனாகும். நாட்டிற்கு மொழியின் பெயரால் தமிழகம் எனப் பெயரிட்டனர். இத்துணைப் பெருமை தமிழர்களைத்தான் சாரும். மொழியின் பெயரை நாட்டிற்கு வைத்த வேறு நாடு எது?

*   *   *   *

சித்தூர் பற்றித் தமிழர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள், வட எல்லை இது. தெற்கு மேற்கு எல்லை என்ன? நாஞ்சில் நாட்டை நாம் எப்படி மறக்க முடியும்? தனி மாகாணம் நிர்ணயிக்கும் போது, தமிழ் மாகாணத்தோடு சேர வேண்டிய பிரதேசங்களுக்காக நாம் போராடியே தீருவோம். ஆகவே, அப்பிரதேச மக்கள் பயப்பட வேண்டியதில்லை.

*   *   *   *

அரசாங்கம் தமிழில் நடக்கவேண்டும். சட்டசபையில் நாம் தமிழில்தான் பேசவேண்டும். பொருளாதாரத்தைத் தமிழில் ஆராயவேண்டும். விஞ்ஞானத்தைத் தமிழில் கற்கவேண்டும்.

*   *   *   *

ஆங்கிலத்தில் உள்ள எல்லா இலக்கிய நூல்களும் சாமானிய ஆங்கிலமக்கள் வாங்கிப்படித்து அனுபவிக்

கும் விதத்தில் அநேகம் பதிப்புக்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்வியில் தேர்ந்தவர்களுக்கென்று உயர்ந்த ஆராய்ச்சி உரைகளுடன் தனிப்பதிப்புக்கள் இருக்கின்றன. பொதுமக்களுக்குப் பயன்படும் விதத்தில், தெளிவான எளிய உரையுடன் குறைந்த விலைக்கும் அழகான ரூபத்திலும் பொதுமக்கள் பதிப்புக்கள் ஏராளமாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களும் எளிய உரையுடன் பொதுமக்கள் பதிப்பாக ஒன்றுபோன்ற ரூபத்தில் வெளியாக வேண்டுமென்று எனக்கு வெகுநாளாய் ஆசையுண்டு. இந்தப் பணியை நிறைவேற்றத் தமிழ் அறிஞர்களும் பெரியார்களும் முன்வந்தால், அது தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாகும்.

* * * *

நாம் பெற்ற கல்விச் செல்வத்தைப் பிறர்க்குப் பங்கிட்டுக் கொடுக்கும்போதுதான் நம் இன்பம் பூர்த்தி அடைகிறது.

* * * *

உலகில் பஞ்சம் நீங்கவேண்டுமானல் மனத்திலுள்ள வஞ்சம் நீங்கவேண்டும். எல்லோரும் இன்புறும் விதத்தில் நாம் சேவை புரியவேண்டும்.

* * * *

சமீபகாலத்தில், தாய்மொழியை நன்ருய்ப் படிக்க வேண்டும் என்ற விருப்பமும், இந்தியாவின் பல்வேறு கலாசாரங்களில் மறுமலர்ச்சி தோற்றுவிக்க வேண்டும் என்ற ஆர்வமும் இருக்கக் காண்கின்றேன். இவை இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் பிரிவு மனப்பான்மையின் விளைவு என்பாரோடு நான் இசையேன்.

இந்த விருப்பத்திற்கும், ஆர்வத்திற்கும் எதிராக இருப்பவர்களையே இந்தியதேசிய எதிரிகள் என நான் உண்மையாகக் கருதுகின்றேன். ஏனென்ருல், இந்தியப் பண்பாடு என்ருே, இந்தியத் தேசீயம் என்ருே சொல்லப்படுவது பல்வேறு பண்பாடுகள் பல்வேறு இனவுணர்ச்சிகள் ஆகியவற்றின் கூட்டு என்பதை அவர்கள் மறந்துவிடுகிருர்கள்; இப் பல்வேறு பண்பாடுகள் நெடுங்கால மரபுடையன என்பதையும் அழுத்தமான தனித்தனிச் சிறப்புடையன என்பதையும் மறந்து விடுகிருர்கள்.

* * * *

உலகில் மனித வாழ்க்கை தோன்றிய நாள்முதல் இதுவரையில் அநேகம் மாறுதல்கள் உண்டாகி யிருக்கின்றன. ஆனுல், இயற்கையின் அழகு, காதலின் சிறப்பு —இந்த இரண்டு விஷயங்களிலும் எவ்வித மாறுதலும் உண்டாகவில்லை. பண்டைக்காலத் தமிழ் மக்கள் இவ்விரண்டையும் நன்கு அனுபவித்திருக்கிருர்கள்.

கழக வெளியீடு: கூருகூ

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

விலை அணா 12.

அப்பர் அச்சகம், சென்னை - 1.